THIRUMARAI AASAAN

S. Rajanayagam
Editor
86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.
PH. : 04257 - 230030 Cell : 98427 - 30382, 99655 - 30385

Pleading for the restoration of pure New Testament Christianity
Vol. 29 November 2016 Issue - 11

ஆசிரியர் உரை

# தேவனுக்கு முன்பாக மனத்தாழ்மை

மானிடராய்ப் பிறந்த எல்லோருக்கும் அவரவர்களுக்கான அடையாளங்களாக வித்தியாசமான பண்புகள் அல்லது குணங்கள் இருக்கவே செய்கின்றன. அவைகளுள் நல்ல பண்புகள் என்று போற்றப்படுபவைகளும் உண்டு, மோசமான குணங்கள் என்று தூற்றப்படுபவைகளும் உண்டு. அப்படி நல்லது எனப் போற்றப்படுபவைகளின் பட்டியலில் முதலிடம் பிடிக்கத் தகுதியானதென்று ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்படக் கூடியது தாழ்மை அல்லது மனத்தாழ்மை ஆகும். சிறப்புக்குரிய இம்மனத் தாழ்மை குறித்து ஓர் அறிஞன் இவ்விதம் விளக்கம் கொடுத்துள்ளார். “மனத்தாழ்மை என்பது ஒரு விசித்திர குணம். நான் மனத்தாழ்மையாய் இருக்கிறேன் என்று ஒருவன் நினைத்த மாத்திரத்தில் அது அவனைவிட்டு எடுபட்டுப் போகிறது ” என்று. இந்தளவு மென்மைத் தன்மை கொண்டு, “தொட்டாச் சிணுங்கி ” யாக வேறெந்தப் பண்பும் இல்லை.

இந்த மனத்தாழ்மையானது, அதன் ஆழ்ந்த பொருளில் நம்மைப் போன்றவர்களால் புரிந்து கொள்ளப்பட்டிருக்கிறதா என்பது கேள்விக்கிடமான ஒன்று. எப்படியெனில், மனத்தாழ்மை என்பது பணிவுக்குச் சமமான ஒரு பண்பாகவே பெரும்பாலும் பாவிக்கப்படுகிறது. குறிப்பாக, அங்க அசைவுகளை அடிப்படையாகக் கொண்டதென்று பேசப்படுகிறது. அதாவது, ஒருவருக்கு முன்பாகக் கைகட்டி பவ்வியமாக நிற்பது, பணிந்து குனிந்து ஒருவருக்குச் சேவகம் செய்வது, மார்பிலே கையை வைத்துத் தலையைத் தாழ்த்துவது, தன் இருக்கையை பிறருக்கு விட்டுக்கொடுத்து எழுந்து நிற்பது என்று இவைகளெல்லாம் தாழ்மை குணத்தின் சின்னங்

களாக மதிக்கப்படுகிறது. இப்படியெல்லாம் நடந்து கொள்வது மோசமான செயல்பாடுகள் என்று இங்கு நான் கூற வரவில்லை. மாறாக, தாழ்மையின் மெய்யான பொருளை இவைகள் முழுமையாக வெளிப்படுத்துவதில்லை யென்று தான் குறிப்பிடுகிறேன். ஏனெனில், அங்க அசைவுகளின் மூலம் வெளித்தோற்றத்தில் தாழ்மையை வெளிப்படுத்துகிறவர்கள் கூட மனதில் மேட்டிமை உடையவர்களாக இருக்க வாய்ப்புண்டு.

மனத்தாழ்மையின் மெய்ப் பொருளானது, மானிட சமுதாயத்திட மிருந்து தன்னை அந்நியப்படுத்தி வெகுகாலமாகிவிட்டது என்று சொன்னால் அது மிகையாகாது. ஆம், ஒட்டுமொத்த மானிட சமுதாயமும் ஏதாவது ஒரு வகையான பெருமையுணர்வாலும், மேட்டிமை எண்ணத் தாலும் மோசம் போயுள்ளது. இம்மோசத்திற்குக் காரணமாக தேசப் பெருமை, மொழிப்பெருமை, கலாச்சாரப்பெருமை, குலப்பெருமை, குடிப் பெருமை, கல்விப்பெருமை, பாரம்பரியப்பெருமை, செல்வப்பெருமை, செல்வாக்குப்பெருமை, மதப்பெருமை, பக்திப்பெருமை, அழகுப்பெருமை, பெரும்பான்மைப் பெருமை என்று ஏதாவது ஒன்றோ அல்லது ஒன்றுக்கும் மேற்பட்டதோ இருக்க வாய்ப்புண்டு. இத்தாழ்நிலைக்குக் கிறிஸ்தவ மாகிலும் விதிவிலக்காக இருக்கிறதா என்று கிட்டப் போய் எட்டிப் பார்த்தால் மிஞ்சுவது விரக்தி மட்டுமே. இதில் வேடிக்கை என்னவென்றால், மனத்தாழ்மையின் ஒட்டுமொத்த உருவமாகவும் ( பிலி 2 : 8 ), மனத்தாழ்மையின் முழு இலக்கணமாகவும் (யோவான் 13 : 1 – 10) திகழும் இயேசு கிறிஸ்துவைப் பின்பற்றுகிறோம் என்று மார்தட்டும் ஒட்டு மொத்த கிறிஸ்தவ சமுதாயம், இக்காரியத்தில் உலக மக்களோடு, “ நீயா, நானா? ” போட்டியில் இறங்கியிருப்பதுதான்.

இதற்கு முடிவுகட்டும் முயற்சியாகத்தான், இம்மாதத் தலயங்கத்தை அலங்கரிக்கும்படியாக, மீகா தீர்க்கன் நூலிலிருந்து ஒரு வசனத்தைத் தெரிந்திருக்கிறேன், கவனியுங்கள். **மனுஷனே, நன்மை இன்னதென்று அவர் உனக்கு அறிவித்திருக்கிறார். நியாயஞ்செய்து, இரக்கத்தை சிநேகித்து, உன் தேவனுக்கு முன்பாக மனத்தாழ்மையாய் நடப்பதை அல்லாமல் வேறே என்னத்தைக் கர்த்தர் உன்னிடத்தில் கேட்கிறார்**. ( மீகா – 6 : 8 ). இவ்வச னத்தைக் கொஞ்சம் குனிந்து கவனித்தால், மனத் தாழ்மையில் இரண்டு வகை இருப்பதைப் புரிந்து கொள்ளலாம். ஒன்று, **மனிதனுக்கு முன்பான மனத்தாழ்மை**. இன்னொன்று, **தேவனுக்கு முன்பான மனத்தாழ்மை**. இன்றைய கிறிஸ்தவத்திற்குத் தேவை தேவனுக்கு முன்பான மனத்தாழ்மையே.

ஏன் இப்படிப் பிரித்துப் பேச நேர்ந்தது என்பதைத் தெரிந்து கொள் ளவும், தேவனுக்கு முன்பான மனத்தாழ்மை பற்றிய தெளிவான பார்வையை நாம் பெற்றுக் கொள்ளவும், நமது ஆசானின் வழக்கத்தின்படி

இந்நூலின் பின்னணித் தகவல்களைப் பார்த்து விடுவோம். சரியா!

இந்த மீகா தீர்க்கன், யூதா ராஜாக்களாகிய யோதாம், ஆகாஸ், எசேக்கியா என்னும் மூன்று ராஜாக்களின் நாட்களில் தீர்க்கதரிசனம் உரைத்தவன். இம்மூவரும் தாத்தா, மகன், பேரன் ஆகியோர். இவனுடைய தீர்க்கதரிசன ஊழியம் ஒரு முப்பது ஆண்டுகள் நீடித்துள்ளதாக தெரிகிறது. மீகாவின் பெயருக்கான பொருள், **தேவனுக்கு ஒப்பானவர் யார்?** என்பது ஆயினும், தேவனுக்கு ஒப்பானவர் யாருமில்லை என்பதை மீகாவின் காலத்தில் வாழ்ந்தவர்கள் மறந்து போனார்கள். இதினிமித்தம், எருசலேமுக்குத் தென் மேற்கே சுமார் 40 கி.மீ. தொலைவிலிருந்த, " மொரோசா " என்னும் குக்கிராமத்திலிருந்து எருசலேம் மற்றும் சாமாரியாவின் அதிபதிகளுக்கும், குடிகளுக்கும் எதிராகத் தேவனிடமிருந்து வரும் கடுமையான எச்சரிப்பின் செய்தியைச் சொல்லும்படி இவன் அழைக்கப்பட்டான்.

மீகாவின் நாட்களில் பக்திச் சீரழிவின் காரணமாக சமூக அநீதி தலைவிரித்தாடியது. வலுத்தவர்களின் கையில் வல்லமை இருந்தபடியால், ஏழைகள் சுரண்டப்பட்டு, ஒடுக்கப்பட்டார்கள் (மீகா 2 : 1, 2). எத்தரப்பும் தீமைக்கு விலகியிருக்கவில்லையென்பதற்கு மீகா. 3 : 11 – ம் வசனம் சாட்சி பகர்கிறது. **அதன் தலைவர்கள் பரிதானத்துக்கு நியாயந்தீர்க்கிறார்கள். அதன் ஆசாரியர்கள் கூலிக்கு உபதேசிக்கிறார்கள். அதன் தீர்க்கதரிசிகள் பணத்துக்குக் குறி சொல்லுகிறார்கள். ஆகிலும் அவர்கள் கர்த்தரைச் சார்ந்து கொண்டு, கர்த்தர் எங்கள் நடுவில் இல்லையோ? தீங்கு எங்கள் மேல் வராது என்கிறார்கள்.** இதெப்படி? இவர்கள் விருப்பம் போல் செய்வார்களாம். கர்த்தரும் இவர்கள் நடுவில் இருப்பாராம்! மாத்திரமல்ல, தீங்கும் இவர்கள் மேல் வராதாம். ஆவிக்குரிய ரீதியில் எவ்வளவு கீழான மனோபாவம் பாருங்கள்!!

இந்த மீகா தீர்க்கன் பற்றி இன்னொன்றையும் நான் இங்கே குறிப்பிட்டாக வேண்டும். ஆம், ஏசாயா போன்று இவரும் ஒரு " மேசியா தீர்க்கனே ". சொல்லப்போனால், எல்லாத் தீர்க்கதரிசிகளும் ஒரு வகையில் மேசியா தீர்க்கதரிசிகளே. ஒவ்வொரு தீர்க்கதரிசியின் செய்தியும் ஏதாவது ஒரு வகையில் மேசியாவைச் சுட்டிக் காட்டுவதாகவே இருக்கும். ஆயினும், ஏசாயா, மீகா போன்றவர்கள் நேரிடையாக இதில் சம்பந்தப்படுகிறார்கள் அவ்வளவே. நம்முடைய மீகா, இயேசு பெத்லகேமில் பிறப்பார் என்பதை முன்னறிவித்ததோடு ( மீகா 5 : 2 ) எருசலேமில் கர்த்தருடைய சபை ஆரம்பமாகி, கர்த்தருடைய வசனம் அங்கிருந்து வெளிப்படும் என்பதையும் குறிப்பிட்டிருக்கிறார். (மீகா 4 : 1 – 3).

சரி, இப்பொழுது, உண்மையான மனத்தாழ்மைக்கான பேச்சு எப்படி, ஏன் வந்ததென்று பார்ப்போம். தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட ஜனங்களின் தேவவிரோதச் செயல்கள் உச்சத்திற்குச் சென்றபடியால், தேவன் தன்

ஜனங்களோடே வழக்கு இருக்கிறதாகக் கூறியதோடு, நன்றி கெட்ட ஜனமே, எனக்குப் பதில் சொல்லுங்கள் என்று கேட்கிறார் (6 : 1 - 3). அப்பொழுது இஸ்ரவேல் ஜனங்களுக்கு ஆதிமுதல் செய்த நன்மைகளைப் பொறுக்கி யெடுத்துப் பட்டியலிடுகிறார் ( 6 : 4, 5 ). ஆனால், இந்த ஜனங்களோ, தேவன் செய்த எல்லாவற்றையும் மறந்து, **பக்திக் காரியங்களில் தேவ னுடைய** எதிர்பார்ப்பைச் சுத்தமாகக் கண்டு கொள்ளாமல், பொய்யான பணிதல் மூலமாகவும், போலியான பலிகள் மூலமாகவும், தேவனைப் பிரியப்படுத்தி விடலாம் என்று மனப்பால் குடித்து, எப்பொழுதும் போல தப்புக் கணக்குப் போட்டு வாழ்ந்தார்கள். அட மனிதா, பக்திக் காரியங்களில் தப்புக் கணக்குப் போடுவதே எப்பொழுதும் உன் வழக்கமாகி விட்டதோ?

மீகா காலத்தில் வாழ்ந்தவர்களுடைய பக்திச் செயல்பாடுகள் ஒவ்வொன்றும் மனிதர்கள் பார்வையில் மனத்தாழ்மை உள்ளது போன்ற தோற்றத்தை அவர்களுக்கு ஏற்படுத்தினபடியாலும், இப்பொய் மனத் தாழ்மையில் அவர்கள் திருப்திபட்டு தேவன் அவைகளில் பிரியப்படுவார் என்று நம்பினபடியினாலும், அவர்களுக்கு தேவனுக்கு முன்பான மனத் தாழ்மை எது என்பது பற்றி எடுத்துரைக்க வேண்டிய தேவை வந்தது. மீகா நாட்களிலிருந்த அதே தேவை தான் நம்முடைய நாட்களிலான கிறிஸ்தவத்திற்கும் அவசரமாகத் தேவைப்படுகிறது.

ஆகையால், தேவனுக்கு முன்பான மனத்தாழ்மை எப்படி இருக்க வேண்டுமென்பது பற்றி ஒரு மூன்று நிலைகளில் நின்று கவனித்து, நமக்கான சில பாடங்களைக் கற்றுக் கொள்ள முயற்சிப்போம்.

### I மனத்தாழ்மையின் ஆவிக்குரிய பொருள்

தேவனுக்கு முன்பாக மனத்தாழ்மையாய் நடந்து கொள்வதற்கு, நாம் தெரிந்து கொள்ள வேண்டிய முதல் பாடம். மனத்தாழ்மையின் ஆவிக் குரிய பொருள் என்ன என்பது பற்றியது.

மீகா தீர்க்கன் இங்கே பேசுவது தேவனுக்கு முன்பான மனத்தாழ்மை. அதாவது, ஆவிக்குரிய ரீதியிலான மனத்தாழ்மை. இதன் பொருள், **பரிசுத்த தேவனுக்கு முன்பாகத் தன் நிலை உணர்ந்து, தான் ஒரு பாவி என்பதை அப்பட்ட மாகவும், தான் ஓர் உதவாக்கரை என்பதைக் கூச்சமில்லாமலும் ஏற்றுக் கொள்வதே**. இப்படிப்பட்ட மனத்தாழ்மையைத்தான் புதிய ஏற்பாடும் வலியு றுத்துகிறது. **கர்த்தருக்கு முன்பாகத் தாழ்மைப்படுங்கள்** என்று (யாக். 4 : 10). இந்த மனத்தாழ்மையின் அவசியத்தை இயேசுவானவர் உணர்ந்த படியால் தான், **ஆவியில் எளிமையுள்ளவர்களை பாக்கியவான்கள்** (மத். 5 : 13) என்று கூறி தனது மலைப்பிரசங்கத்தை ஆரம்பித்தார்.

ஆவியில் எளிமை என்பதற்கு ஏசாயா தீர்க்கன் கொடுக்கும் ஒரு விளக்கத்தைப் பாருங்கள். **நாங்கள் அனைவரும் தீட்டானவர்கள் போல இருக்கிறோம். எங்களுடைய நீதிகளெல்லாம் அழுக்கான கந்தைபோல இருக்கிறது. நாங்கள் அனைவரும் இலைகளைப்போல உதிருகிறோம். எங்கள் அக்கிரமங்கள் காற்றைப்போல் எங்களை அடித்துக்கொண்டு போகிறது** என்று ( ஏசா : 64 : 6). எப்படி? ஆவிக்குரிய மனத்தாழ்மைக்கான விளக்கம் விளங்குகிறதா?

ஆவிக்குரிய மனத்தாழ்மையின் பொருளைச் செயலில் காட்டிய ஒரு மாமனிதனை லூக்கா 18 : 13 ம் வசனத்தில் நாம் காணலாம். அவன், பெயர் சொல்லப்படாத ஆயக்காரான். பாவி என்று சுய நீதிக்காரர்களால் பட்டம் கட்டப்பட்டவன். ஜெபம்பண்ணும்படி தேவாலயத்துக்குச் சென்ற அந்த மனிதனுடைய செயல்பாட்டைப் பாருங்கள். **ஆயக்காரன் தூரத்திலே நின்று, தன் கண்களையும் வானத்துக்கு ஏறெடுக்கத் துணியாமல், தன் மார்பிலே அடித்துக்கொண்டு, தேவனே ! பாவியாகிய என்மேல் கிருபையாயிரும் என்றான்.** இப்படிப்பட்ட மனத்தாழ்மையைத் தான் ஒவ்வொரு கிறிஸ்தவனும் பெற்றிருக்க வேண்டுமென்று பரிசுத்த ஆவியானவர் விரும்பி, பேதுரு அப்போஸ்தலனைக் கொண்டு, **மனத்தாழ்மையை அணிந்து கொள்ளுங்கள்** என்று எழுதியுள்ளார் ( I பேதுரு 5 : 5).

அன்பானவர்களே! ஆவிக்குரிய நிலையில் இப்படிப்பட்ட மனத்தாழ்மை நம்மிடம் காணப்படுகிறதா? பெருமையைத் தேவன் எதிர்க்கிறார் என்றும், தாழ்மைக்குக் கிருபை அளிக்கிறார் என்றும் நமக்குக் கூவிக் கூவிச் சொன்னாலும் பெருமைக்குரியவைகளைத் தானே தேடித்தேடி அலைகிறோம்! நாம் ஒருபோதும் திருந்தவே மாட்டோமா? இம்மைக்குண்டான வாழ்வில் நாம் தேவனால் உயர்த்தப்பட வேண்டுமானால், கர்த்தருக்கு முன்பாக நம்மைத் தாழ்த்தியாக வேண்டும். வேறு வழியே இல்லை. (யாக் - 4 : 10) அது போலவே, ஆவிக்குரிய வாழ்வில், நாம் நம்மைத் தேவனுக்கு முன்பாகத் தாழ்த்தினால் மட்டுமே, நாம் பாக்கியவான்களாக மாற முடியும். இயேசு இப்பாக்கியமான நிலைக்கு உத்திரவாதம் தருகிறார். ஆகவே, பெருமைக்குப் பாடை கட்டி தாழ்மைக்குத் தலை வணங்குவோம்.

### II மனத்தாழ்மையின் ஆவிக்குரிய வெளிப்பாடு

தேவனுக்கு முன்பாக மனத்தாழ்மையாய் நடப்பதற்கு, நாம் அறிந்து கொள்ள வேண்டிய இரண்டாம் பாடம், கற்றுக்கொள்ளும்படியாக நம்மை அனுமதிப்பது.

இதென்ன புதிதாக இருக்கிறது? கற்றுக் கொள்வதற்கும் மனத்தாழ்மைக்கும் என்ன சம்பந்தம் இருக்கிறதென்று எண்ணுகிறீர்களா? நிச்சயமாக இருக்கிறது, கவனியுங்கள். இன்றைக்கு ஒட்டுமொத்த சமுதா

யத்தின் நினைப்பு என்ன? **எனக்கு எல்லாம் தெரியும் என்னும் மனோபாவம்**. ஒன்றும் தெரியாதவர்களுக்குக் கூட இந்த நினைப்பு இருக்கிறது. ஒரு சமயம் இயேசு, **நீங்கள் வேதவாக்கியங்களையும், தேவனுடைய வல்லமை யையும் அறியாமல் தப்பான எண்ணங்கொள்ளுகிறீர்கள்** (மத். 22 : 29) என்று கூறி குற்றப்படுத்தினார். ஒருவேளை, சரீர வாழ்க்கையின் காரியங்களில் தெரிய வேண்டியவைகள் தெரியாமல் கணிப்பும், கணக்கும் மாறிப் போனால் " சரி, போகட்டும் " என்று விட்டுவிடலாம். ஆனால், ஆவிக்குரிய வாழ்வில் கணக்குத் தப்புமானால், " எல்லாமே போச்சே ". நித்திய நித்திய மான அழிவு தானே காத்திருக்கும். அதற்குப் பிறகு வாய்ப்பே இல்லையே!

ஆகவே, இதிலிருந்து தப்பிக்க வேண்டுமானால், ஆவியில் எளிமை யுள்ளவர்களாக மாறி, மனத்தாழ்மையை அணிந்து கொண்டு, கிறிஸ்து வின் உபதேசங்களைக் கற்றுக்கொள்வதற்கு மனதைத் திறந்து வைக்க வேண்டும். ஒரு சமயம் இயேசுவின் " சீஷர்கள் அவரிடத்தில் வந்து, பரலோக ராஜ்ஜியத்தில் எவன் பெரியவனாயிருப்பான் " என்று கேட்டபோது, ஒரு பிள்ளையை அவர்கள் நடுவே நிறுத்த, **நீங்கள் மனந்திரும்பிப் பிள்ளைகளைப் போல் ஆகாவிட்டால், பரலோக ராஜ்ஜியத்தில் பிரவேசிக்க மாட்டீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்** என்றார் ( மத் - 18 : 1 - 4 ) பிள்ளைகளைப் போல் மாற வேண்டுமென்பதின் பொருள்களில் ஒன்று கற்றுக்கொள்ளும் மனப்பான்மை உள்ளவர்களாக மாற வேண்டும் என்பது. பொதுவாகவே, சிறுபிள்ளைகள் தெரிந்து கொள்ளும் ஆர்வம் உடையவர்களாயிருந்து, பெற்றோர்களிடத்தில் கேள்வி மேல் கேள்வி கேட்பார்கள். அப்படிப்பட்ட மனநிலை தான் தேவனைப் பின்பற்ற விரும்பும் ஒருவனுக்குத் தேவை.

இப்படிக் கற்றுக் கொள்ளும் மனப்பான்மைக்குச் சிறந்த எடுத்துக் காட்டு எத்தியோப்பிய மந்திரி. இம்மனப்பான்மை மந்திரிக்கு இருந்த படியால் தான், கிறிஸ்துவின் உபதேசப்படி இரட்சிப்படைந்து, சந்தோஷத் தோடே தன் வழியே போக முடிந்தது. (அப் 8 : 27 - 39) ஆம், அவனுடைய பக்திப் பயணத்தின் ஒரு கட்டத்தில், கர்த்தருடைய ஊழியக்காரனாகிய பிலிப்பு: நீர் வாசிக்கிறவைகளின் கருத்து உமக்குத் தெரியுமா என்று கேட்ட போது, **ஒருவன் எனக்குத் தெரிவிக்காவிட்டால் அது எனக்கு எப்படித் தெரியும்** என்று சொல்லி, ( 8: 30, 31 ) பிலிப்புவிடமிருந்து கற்றுக் கொள்ளத் தன்னை அனுமதித்தான். அப்படிக் கற்றுக் கொள்வதற்கு தன்னுடைய பட்டம், பதவி, செல்வாக்கு என்று எதுவும் குறுக்கே நிற்க அவன் அனுமதிக்கவில்லை. மந்திரி மிகுந்த மனத்தாழ்மையோடு நடந்து உண்மையைக் கண்டு பிடித்தான் என்பதை அங்கே காண முடிகிறது.

அருமையானவர்களே! நம்மில் எத்தனை பேருக்கு இப்படிக் கற்றுக்

கொள்ளும் மனப்பான்மை ஆவிக்குரிய வாழ்வில் இருக்கிறது? வேதா கமத்தில் மொத்தம் எத்தனை புத்தகங்கள் இருக்கிறதென்று தெரியாதவர் கள் கூட, நாங்கள் கிறிஸ்துவின் உபதேசத்தில் அத்துப்படியாக உள்ளோம் என்றல்லவா காட்டிக் கொள்ள விரும்புகிறார்கள்! ஆவிக்குரிய ரீதியில் மனத்தாழ்மையோடு கற்றுக் கொள்ள மறுப்பதற்கு நாம் கொடுக்க நேரும் விலை நித்திய ஜீவன் என்பதை மறந்து விடாதீர்கள். பவுலடியார், " எல்லா வற்றையும் சோதித்துப் பார்த்து நலமானதைப் பிடித்துக் கொள்ளுங்கள் " என்றே கூறியுள்ளார் ( I தெச. 5 : 21). கற்றுக்கொள்ள விருப்பமில்லாத ஒருவன், தன் பக்தி நிலை சரியா, தவறா என்று எப்படிச் சோதித்துப் பார்க்க முடியும்? வாய்ப்பே இல்லை. ஆகவே, நம்முடைய நிலையில் மாற்றத்தைக் கொண்டுவர நம்மை அனுமதிப்போம்.

### III மனத்தாழ்மையின் ஆவிக்குரிய செயல்பாடு

தேவனுக்கு முன்பாக மனத்தாழ்மையாய் நடப்பதற்கு, நாம் புரிந்து கொள்ள வேண்டிய இன்னுமொரு பாடம், மனத்தாழ்மையைச் செயலில் காட்டுவது.

தேவனுக்கு முன்பான மனத்தாழ்மை என்பது **இருதயம் சார்ந்த ஒன்று** என்பது உண்மையே. ஆயினும், அப்படி நடப்பதற்கு செயலும் சம்பந்தப் படுகிறதென்பதை நினைவில் கொள்ள வேண்டும். தேவனோடு மனத் தாழ்மையாய் நடக்கிறேன் என்று சொல்லுகிற ஒருவர் தன் வாழ்வின் ஒவ் வொரு கட்டத்திலும் அதை வெளிப்படுத்த வேண்டும். ஆதிப் பெற்றோரா கிய ஆதாமும், ஏவாளும் தேவனுக்கு முன்பாக மனத்தாழ்மையாய் நடக்க வில்லையென்பதை அவர்கள் **கீழ்ப்படியாமைச் செயல்தான்** வெளிச்சம் போட்டுக் காட்டியது. (ஆதி : 3 : 6) பரலோகத்தின் தேவன் அவரை ஏற்று வாழ்கிறவர்கள் பக்திக் காரியங்களில் சிறந்த செயல்பாடுடையவர்களாக இருக்க வேண்டுமென்ற வலியுறுத்துகிறார். அப்போஸ்தலன் பவுலைக் கொண்டு பரிசுத்த ஆவியானவர், உத்தம குமாரனாகிய தீத்துவுக்கு இவ்விதம் எழுதியுள்ளார். " அவர்கள் தேவனை அறிந்திருக்கிறோமென்று அறிக்கை பண்ணுகிறார்கள். கிரியைகளினாலோ அவரை மறுதலிக்கிறார் கள்; அவர்கள் அருவருக்கப்படத்தக்கவர்களும், கீழ்ப்படியாதவர்களும், எந்த நற்கிரியையுஞ் செய்ய ஆகாதவர்களுமாயிருக்கிறார்கள் என்று. (தீத்து - 1 : 16) செயல்பாடு எவ்வளவு முக்கியம் என்பதைக் கவனியுங்கள்.

மனத்தாழ்மையை ஒருவன் செயலில் காட்டாதபோது, தேவனால் அது மாயமான தாழ்மை " யாகவே பார்க்கப்படும். அதாவது, அது பொய்யான, ஏமாற்றுத்தனமான தாழ்மையாகவே பார்க்கப்படும். இப்படிப்பட்ட தாழ்மை யால் ஒருவன் வஞ்சிக்கப்பட்டு பந்தயப்பொருளை இழந்து போக வாய்ப்

புண்டு என்று கொலோசெ பட்டணத்துக் கிறிஸ்தவர்களைப் பவுல் எச்சரித்தார். (கொலோ 2 : 19, 23).

மாயமான தாழ்மைக்குத் தண்டனை இருப்பது போன்று, உண்மை யான மனத்தாழ்மையோடு கூடிய செயல்பாட்டுக்குப் பலனும் உண்டு என்பதை நாம் கவனிக்கத் தவறிவிடக் கூடாது. பழம் பெரும் பக்தர்களாகிய ஏனோக்கும், நோவாவும் இதற்குச் சரியான சான்றுகள். ஏனோக்கு தேவன் விரும்பும் மனத்தாழ்மையுடன், தேவனோடு சஞ்சரித்துக் (நடந்து) கொண்டி ருக்கையில் காணப்படாமற் போனான். தேவன் அவனை எடுத்துக் கொண் டார். ( ஆதி. 5 : 24 ) செயல்பாட்டுடன் கூடிய மனத்தாழ்மை அவன் என் றென்றும் தேவனோடு வாழும்படி செய்தது. நோவா தேவன் எதிர் பார்க்கும் மனத்தாழ்மை உடையவனாய் இருந்து தேவன் தனக்குக் கட்டளையிட்ட படியெல்லாம் செய்து, தேவனோடு நடந்து, வாழ்ந்தபடியால், தன்னையும், தன் குடும்பத்தையும் இரட்சித்துக் கொண்டான். (ஆதி. 6 : 9 ; எபி. 11 : 7).

அப்படியானால், ஏனோக்கு போன்று என்றென்றும் தேவனோடு நம்மை வாழச் செய்யும்படியான மனத்தாழ்மையும், நோவா போன்று கிறிஸ்துவின் உபதேசச் சட்டங்கள் எல்லாவற்றிற்கும் நம்மை முழுமை யாகக் கீழ்ப்படுத்தும் மனத் தாழ்மையும் நம்மிடம் காணப்படுகிறதா? நம் வாயினால் போலி மனத்தாழ்மையை வெளிப்படுத்தி, இருதயத்திலும் செயலிலும் கிறிஸ்துவையும், அவர்தம் சொந்த இரத்தம் சிந்தி சம்பாதித்த (அப். 20 : 28) சபையையும், கிறிஸ்துவின் உபதேசத்தையும் (II யோவான் 9), அவருடைய இரட்சிப்பின் திட்டத்தையும் (அப். 4 : 12) நடைமுறையில் நாம் எதிர்த்துக் கொண்டுள்ளோமே! சொல்லுங்கள்.

அருமையானவர்களே! தேவனுக்கு முன்பான மனத்தாழ்மை என்பது இருவழிப்பாதை. மீகா காலத்து மக்கள் தேவன் அவர்கள் பக்தி வாழ்வுக்கு எவைகளையெல்லாம் செய்யும்படியாகச் சொல்லியிருக்கிறார் என்பது குறித்துக் கிஞ்சித்தும் கவலைப்படாமல், இவர்கள் விரும்பும் பொய்யான பணிவு, போலியான பலி, விருப்பமான காணிக்கை என்று தங்கள் பக்தியை ஒருவழிப்பாதையாக மாற்றிவிட்டார்கள். ஆகவேதான், மனத்தாழ்மை பற்றி, அதுவும் தேவனுக்கு முன்னான மனத்தாழ்மை பற்றி எடுத்துச் சொல்லும் அவசியம் வந்தது.

இப்படிப்பட்ட அவசியத்திலிருந்து கிறிஸ்தவம் இன்னும் மீண்டபா டில்லை என்பது வேதனையான ஒன்று. முன்பு எழுதப்பட்டிருப்பவைகள் நமக்குப் போதனையாக இருக்கிறதென்று பவுலடியார் நமக்குச் சொல்லி யிருக்கிறபடியால் ( ரோமர் 15 : 4 ), தேவனுக்கு முன்னான மனத்தாழ் மைக்குப் நம்மை முற்றிலும் ஒப்புக் கொடுப்போமாக! ஆமென்!! ●

## ஏன் நாங்கள் பரலோகத்தில் நம்பிக்கை வைக்கிறோம்?

Bro. J.C. சோட்

பரலோகம் பற்றி நான் பேசும் போது நான் வானம், மேகம் அல்லது உலகைச் சுற்றியுள்ள வளிமண்டலம் பற்றிப் பேசவில்லை. சில நேரங்களில் நாம் இவைகளைப் பரலோகம் என்று கூட குறிப்பிடுகிறோம். ஆனால், நான் உங்களிடம் பேசும் பரலோகம் என்பது, தேவன் வாசம் செய்யக்கூடிய இடம். இது ஓர் அழகான இடம், நீதிமான்களின் வீடு. அங்கேதான் தேவ பக்தியுள்ள ஆத்துமாக்கள் தங்கள் நித்தியத்தைக் கழிக்கும். தேவனுடைய வார்த்தைகளில் பரலோகம் என்பது புதிய எருசலேம் என்று கூட விவரிக்கப்பட்டிருக்கிறது.

வேத வசனங்கள் பரலோகம் பற்றிப் பொதுவாக பேசுகின்றன. நீதியினிமித்தம் துன்பப்படுகிறவர்களைப் பார்த்து கிறிஸ்து இப்படிச் சொன்னார். " சந்தோஷப்பட்டு களிகூருங்கள் ; பரலோகத்தில் உங்கள் பலன் மிகுதியாயிருக்கும்; உங்களுக்கு முன்னிருந்த தீர்க்கதரிசிகளையும் அப்படியே துன்பப்படுத்தினார்களே " என்று ( மத். 5 : 12 ). " பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக " (லூக்கா 11 : 2) என்று ஜெபிக்கும்படியாக இயேசு தம்முடைய சீடர்களுக்கு கற்றுக்கொடுத்தார். மேலும், இயேசு தம்முடைய சீடர்களிடத்தில், " பரலோகத்திலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்து வையுங்கள்; அங்கே பூச்சியாவது துருவாவது கெடுக்கிறதும் இல்லை; அங்கே திருடர் கன்னமிட்டுத் திருடுகிறதும் இல்லை. உங்கள் பொக்கிஷம் எங்கேயிருக்கிறதோ அங்கே உங்கள் இருதயமும் இருக்கும் " என போதித்தார் (மத்தேயு 6 : 20, 21). அப்போஸ்தலர்கள் கிறிஸ்துவை தேவனுடைய குமாரன் என்று அறிக்கையிட்ட பிறகு, அவர் அவர்களை நோக்கி, " பரலோக ராஜ்யத்தின் திறவுகோல்களை நான் உனக்குத் தருவேன்; பூலோகத்திலே நீ கட்டுகிறது எதுவோ அது பரலோகத்திலும் கட்டப்பட்டிருக்கும், பூலோகத்திலே நீ கட்டவிழ்ப்பது எதுவோ அது பரலோகத்திலும் கட்டவிழ்க்கப்பட்டிருக்கும் என்றார் " (மத்தேயு 16 : 19). இயேசு எழுபது பேரை கட்டளை கொடுத்து வெளியே அனுப்பும்போது, " இதோ சர்ப்பங்களையும், தேள்களையும் மிதிக்கவும், சத்துருவினுடைய சகல வல்லமையையும் மேற்கொள்ளவும் உங்களுக்கு அதிகாரங்

கொடுக்கிறேன்; ஒன்றும் உங்களைச் சேதப்படுத்தமாட்டாது. ஆகிலும், ஆவிகள் உங்களுக்கு கீழ்ப்படிகிறதற்காக நீங்கள் சந்தோஷப்படாமல், உங்கள் நாமங்கள் பரலோகத்தில் எழுதியிருக்கிறதற்காகச் சந்தோஷப்படுங்கள் என்றார் " (லூக்கா 10 : 19, 20).

தொடர்ந்து, மனந்திரும்புகிற ஒரே பாவியினிமித்தம் பரலோகத்தில் மிகுந்த சந்தோஷம் உண்டாகியிருக்கும் என்று நமக்குச் சொல்லப்பட்டிருக்கிறது. (லூக். 15 : 7). கிறிஸ்து பரலோகத்திலிருந்து இறங்கி வந்தவராக சொல்லப்பட்டிருக்கிறார் (யோவான் 3 : 13). இயேசு பிதாவைப் பற்றிப் பேசும்போது வானத்திலிருந்து வந்த மெய்யான அப்பத்தை சீஷர்களுக்கு கொடுப்பதாகச் சொன்னார் (யோவான் 6 : 32). பவுல் கொரிந்து பட்டணத்து கிறிஸ்தவர்களிடம் " பூமிக்குரிய கூடாரமாகிய நம்முடைய வீடு பரலோகத்திலே நமக்கு உண்டென்று அறிந்திருக்கிறோம் " என்றார் ( II கொரி. 5 : 1 ). மறுபடியும், பவுல் கலாத்திய கிறிஸ்தவர்களுக்கு இதைச் சொன்னார். " நாங்கள் உங்களுக்குப் பிரசங்கித்த சுவிசேஷத்தையல்லாமல், நாங்களாவது வானத்திலிருந்து வருகிற ஒரு தூதனாவது, வேறொரு சுவிசேஷத்தை உங்களுக்குப் பிரசங்கித்தால், அவன் சபிக்கப்பட்டவனாயிருக்கக்கடவன் " என்று (கலாத்தியர் 1 : 8). ஒரு நாளில், " தேவனை அறியாதவர்களுக்கும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்களுக்கும் நீதியுள்ள ஆக்கினையைச் செலுத்தும்படிக்கு, கர்த்தராகிய இயேசு தமது வல்லமையின் தூதரோடும், ஜுவாலித்து எரிகிற அக்கினியோடும் வானத்திலிருந்து வருவார் என பவுல் தெசலோனிக்கே பட்டணத்தாருக்கு உறுதி அளித்தார் ( II தெச. 1 : 7 - 9 ).பேதுருவின் வார்த்தைகளை கவனியுங்கள். " நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக; அவர் இயேசு கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுந்ததினாலே, அழியாததும் மாசற்றதும், வாடாததுமாகிய சுதந்திரத்திற்கேதுவாக, ஜீவனுள்ள நம்பிக்கை உண்டாகும்படி, தமது மிகுந்த இரக்கத்தின்படியே நம்மை மறுபடியும் ஜெநிப்பித்தார். கடைசிக்காலத்திலே வெளிப்பட ஆயத்தமாக்கப்பட்டிருக்கிற இரட்சிப்புக்கு ஏதுவாக விசுவாசத்தைக் கொண்டு தேவனுடைய பலத்தினாலே காக்கப்பட்டிருக்கிற உங்களுக்கு அந்தச் சுதந்திரம் பரலோகத்தில் வைக்கப்பட்டிருக்கிறது " ( I பேதுரு 1 : 3 - 5 ). யோவான், பின்பு, " நான் புதிய வானத்தையும், புதிய பூமியையும் கண்டேன்; முந்தின வானமும், முந்தின பூமியும் ஒழிந்து போயின; சமுத்திரமும் இல்லாமற் போயிற்று. யோவானாகிய நான், புதிய எருசலேமாகிய பரிசுத்த நகரத்தைத் தேவனிடத்தினின்று பரலோகத்தைவிட்டு இறங்கி வரக்கண்டேன்; அது தன்

புருஷனுக்காக அலங்கரிக்கப்பட்ட மணவாட்டியைப் போல ஆயத்தமாக்கப் பட்டிருந்தது " (வெளி. 21:1, 2) என்று எழுதியுள்ளார். ஆத்துமாவின் நித்திய வீடும், தேவனுடைய நித்திய வாசஸ்தலமுமாயிருக்கிற பரலோகம் பற்றி இப்படிப் பேசுகிற அநேக வசனப்பகுதிகளை நாம் சொல்லிக் கொண்டே போக முடியும்.

பரலோகத்திற்கு யாரெல்லாம் போவார்கள்? இயேசு தன்னுடைய நாட்களில் வாழ்ந்த மக்களைப் பார்த்து " நீங்கள் மனந்திரும்பிப் பிள்ளை களைப் போல் ஆகாவிட்டால், பரலோக ராஜ்யத்தில் பிரவேசிக்க மாட்டீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் " என்றார் (மத். 18 : 3). பச்சிளங் குழந்தைகள், சிறுபிள்ளைகள் அல்லது கணக்கு ஒப்புவிக்க வேண்டிய வயதை அடையாதவர்கள் தங்கள் செயல்பாடுகளுக்கு பொறுப்பாளியாக மாட்டார்கள். எது சரி, எது தவறு என அவர்கள் அறியாத படியால் அவர்கள் மரிக்கும் போது பரலோகம் போவார்கள். கர்த்தருடைய ராஜ்யம் அல்லது சபை பரலோகத்தில் சேர்க்கப்படும். " அதன் பின்பு முடிவு உண்டாகும்; அப்பொழுது அவர் சகல துரைத்தனத்தையும், சகல அதிகாரத்தையும், வல்லமையையும் பரிகரித்து, தேவனும் பிதாவுமாயிருக் கிறவக்கு ராஜ்யத்தை ஒப்புக்கொடுப்பார் " என்று பவுல் கூறியுள்ளார் ( I கொரி. 15 : 24 ) கிறிஸ்து சபை அல்லது சரீரத்திற்கு தலையாயிருக்கிறார் என்று நாம் எபேசியர் 5 : 23 -ல் வாசிக்கிறோம் ( கொலோ. 1 : 18 ; அப். 20 : 23 ). கர்த்தர் அந்த சபையை கறை திரை முதலானவைகள் ஒன்றும் இல் லாமல் பரிசுத்தமும், பிழையற்றதுமான மகிமையுள்ள சபையாக ஒப்புக் கொடுப்பார் என்பது சுட்டிக்காட்டப்பட வேண்டும் (எபே. 5 : 27) . மத். 13 : 40 – ல் எப்படி கர்த்தர் தம்முடைய தூதர்களை அனுப்பி ராஜ்யத்தில் இருக்கிற சகல இடறல்களையும், அக்கிரமஞ் செய்கிறவர்களையும் கூட்டிச் சேர்ப்பார் என்றும் பின்பு அவர்கள் அழிக்கப்படும்படிக்கு அக்கினியிலே போடப்படு வார்கள் என்றும் வாசிக்கிறோம். ஆனால், சபை பரலோகத்திலிருக்கிற தேவனிடத்தில் ஒப்புக்கொடுக்கப்படும் என்பதின் பொருள், நித்திய காலத் திற்கும் நாம் இரட்சிக்கப்படுவோம் என்பதே. உண்மையுள்ளவர்கள் அல்லது கர்த்தருடைய பிரமாணத்தைக் கைக்கொள்ளு பவர்கள், பரலோகம் போவார்கள் என்று வேத வசனம் சொல்கிறது. கிறிஸ்து வானவர், " நீ படப்போகிற பாடுகளைக் குறித்து எவ்வளவும் பயப்படாதே ; இதோ, நீங்கள் சோதிக்கப்படும் பொருட்டாகப் பிசாசானவன் உங்களில் சிலரைக் காவலில் போடுவான் ; பத்து நாள் உபத்திரவப்படுவீர்கள். ஆகிலும் நீ மரணப்பரியந்தம் உண்மையாயிரு, அப்பொழுது ஜீவ கிரீடத்தை உனக்குத் தருவேன் " என்று சொல்லியுள்ளார் (வெளி. 2: 10).

யாக்கோபு, “ சோதனையைச் சகிக்கிற மனுஷன் பாக்கியவான்; அவன் உத்தமனென்று விளங்கின பின்பு கர்த்தர் தம்மிடத்தில் அன்புகூருகிறவர்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணின ஜீவகிரீடத்தைப் பெறுவான் ” என்று (யாக். 1 : 12). யோவான் இவ்விதமாக எழுதியுள்ளார். “ ஜீவ விருட்சத்தின் மேல் அதிகாரமுள்ளவர்களாவதற்கும், வாசல்கள் வழியாய் நகரத்திற்குள் பிரவேசிப்பதற்கும் அவருடைய கற்பனைகளின் படி செய்கிறவர்கள் பாக்கியவான்கள் ” என்று (வெளி.22 : 14).

அதே நேரத்தில், ஒரு குறிப்பிட்ட சாரர் பரலோகத்தில் இருக்க மாட்டார்கள் என்பது சுட்டிக்காட்டப்பட வேண்டிய ஒன்று. இதில் சாத்தான், அவனுடைய தூதர்கள் (மத். 25 : 41 ) அவிசுவாசமுள்ள கிறிஸ்தவர்கள் (மத். 13 : 41) மற்றும் துன்மார்க்கர் ஆகியோர் இதில் உள்ளடக்கம். (I கொரி 6 : 9, 10; கலா. 5 : 19 - 21). வெளிப்படுத்தின விசேஷம் 21 : 8 -ல் நாம் இப்படியாக வாசிக்கிறோம். “ பயப்படுகிறவர்களும், அவிசுவாசிகளும், அருவருப்பானவர்களும், கொலை பாதகரும், விபசாரக்காரரும், சூனியக் காரரும், விக்கிரகாராதனைக்காரரும், பொய்யர் அனைவரும் இரண்டாம் மரணமாகிய அக்கினியும், கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைவார்கள் ” என்று. மாயக்காரர் பரலோகம் போகமாட்டார்கள் என்பதை நினைவில் கொள்ளுங்கள் ( மத். 24 : 51 ). கடைசியாக, மோசம் போகிறவர்களும் மார்க்க ரீதியாகத் தவறு செய்பவர்களும் இழந்து போவார்கள் ( தீமோ. 3 : 13, ரோமர் 16 : 17, 18).

பரலோகத்தில் யார் இருக்கிறார்? அங்கே தேவன் இருக்கிறார். பர லோகம் ஜீவனுள்ள தேவனுடைய நகரமாக விவரிக்கப்பட்டிருக்கிறது ( எபி. 12 : 22 ). இயேசு கிறிஸ்து அங்கே இருக்கிறார் ( அப். 2 : 30, 33 ). தேவனுடைய தூதர்கள் அங்கே இருக்கிறார்கள். (தெச. 1 : 7 – 9).

பரலோகம் எதைப் போன்று இருக்கும்? யோவான் பரலோகத்தைப் பற்றி இப்படி எழுதியிருக்கிறார். பின்பு, “ நான் புதிய வானத்தையும், புதிய பூமியையும் கண்டேன்; முந்தின வானமும் முந்தின பூமியும் ஒழிந்து போயின; சமுத்திரமும் இல்லாமற் போயிற்று. யோவானாகிய நான், புதிய எருசலேமாகிய பரிசுத்த நகரத்தைத் தேவனிடத்தினின்று பரலோகத்தை விட்டு இறங்கி வரக்கண்டேன்; அது தன் புருஷனுக்காக அலங்கரிக்கப்பட்ட மணவாட்டியைப் போல ஆயத்தமாக்கப்பட்டிருந்தது. மேலும், பரலோகத்தி லிருந்து உண்டான ஒரு பெருஞ்சத்தத்தைக் கேட்டேன்; அது: இதோ, மனுஷர்களிடத்திலே தேவனுடைய வாசஸ்தலமிருக்கிறது, அவர்களி டத்திலே அவர் வாசமாயிருப்பார்; அவர்களும் அவருடைய

ஜனங்களாயிருப்பார்கள், தேவன் தாமே அவர்களோடே கூட இருந்து அவர்களுடைய தேவனாயிருப்பார். அவர்களுடைய கண்ணீர் யாவையும் தேவன் துடைப்பார்; இனி மரணமுமில்லை, துக்கமுமில்லை, அலறுதலுமில்லை, வருத்தமுமில்லை, முந்தினவைகள் ஒழிந்து போயின என்று விளம்பினது. சிங்காசனத்தின் மேல் வீற்றிருந்தவர்: இதோ, நான் சகலத்தையும் புதிதாக்குகிறேன் என்றார். " பின்னும், " அவர்; இந்த வசனங்கள் சத்தியமும் உண்மையுமானவைகள், இவைகளை எழுது என்றார். அன்றியும், அவர் என்னை நோக்கி: ஆயிற்று, நான் அல்பாவும் ஓமெகாவும், ஆதியும் அந்தமுமாயிருக்கிறேன். தாகமாயிருக்கிறவனுக்கு நான் ஜீவத் தண்ணீரூற்றில் இலவசமாய்க் கொடுப்பேன். ஜெயங்கொள்ளுகிறவன் எல்லாவற்றையும் சுதந்தரித்துக் கொள்ளுவான்; நான் அவன் தேவனாயிருப்பேன், அவன் என் குமாரனாயிருப்பேன் " (வெளி. 21:1-7).

தொடர்ந்து நாம் வாசிக்கும்போது, யோவான் இப்படியாக எழுதியுள்ளார். பின்பு, " பளிங்கைப்போல் தெளிவான ஜீவத்தண்ணீருள்ள சுத்தமான நதி தேவனும் ஆட்டுக்குட்டியானவரும் இருக்கிற சிங்காசனத்திலிருந்து புறப்பட்டு வருகிறதை எனக்குக் காண்பித்தான். நகரத்து வீதியின் மத்தியிலும், நதியின் இருகரையிலும் பன்னிரெண்டுவிதமான கனிகளைத்தரும் ஜீவவிருட்சம் இருந்தது, அது மாதந்தோறும் தன் கனியைக் கொடுக்கும்; அந்த விருட்சத்தின் இலைகள் ஜனங்கள் ஆரோக்கியமடைகிறதற்கு ஏதுவானவைகள். இனி ஒரு சாபமுமிராது. தேவனும் ஆட்டுக்குட்டியானவரும் இருக்கிற சிங்காசனம் அதிலிருக்கும். அவருடைய ஊழியக்காரர் அவரைச் சேவித்து, அவருடைய சமூகத்தைத் தரிசிப்பார்கள்; அவருடைய நாமம் அவர்களுடைய நெற்றிகளில் இருக்கும். அங்கே இராக்காலமிராது; விளக்கும் சூரியனுடைய வெளிச்சமும் அவர்களுக்கு வேண்டுவதில்லை; தேவனாகிய கர்த்தரே அவர்கள் மேல் பிரகாசிப்பார். அவர்கள் சதா காலங்களிலும் அரசாளுவார்கள். பின்பு , அவர் என்னை நோக்கி; இந்த வசனங்கள் உண்மையும் சத்தியமுமானவைகள். சீக்கிரமாய்ச் சம்பவிக்க வேண்டியவைகளைத் தம்முடைய ஊழியக்காரருக்குக் காண்பிக்கும் பொருட்டு, பரிசுத்த தீர்க்கதரிசிகளின் கர்த்தராகிய தேவனானவர் தம்முடைய தூதனை அனுப்பினார். இதோ, சீக்கிரமாய் வருகிறேன்; இந்தப் புஸ்தகத்திலுள்ள தீர்க்க தரிசன வசனங்களைக் கைக்கொள்ளுகிறவன் பாக்கியவான் " என்றார். (வெளி. 22:1-7).

வெளிப்படுத்தின விசேஷசப் புத்தகம் முழுவதுமாக நாம் வாசிக்கும் போது, தேவ ஆவியினால் ஏவப்பட்ட யோவான் பரலோகத்தில்,

பொன்னினாலான வீதிகள் இருக்கும் என்றும், பட்டணத்து மதில்களின் அஸ்திவாரங்கள் எல்லாவிதமான விலையேறப்பெற்ற கற்களால் ஆனது என்றும் சொல்கிறார்.

பரலோகம் என்பது ஆயத்தமாக்கப்பட்ட மக்களுக்கான ஆயத்தமாக் கப்பட்ட இடம் என்று ஒருவர் சொல்லியுள்ளார். அது, தேவனும் அவருடைய மக்களும் என்றென்றுமாய் வாழும் ஓர் இடமாக இருக்கிறது. எனவே, மனிதன் இந்த வாழ்க்கையைப் பிரிந்து செல்லும் போது உண்மையாக மரிப்பதில்லை. சரீரப் பிரகாரமாக அவன் மரிப்பான். ஆனால், அவன் ஆத்துமா நித்திய நித்தியமாக வாழும். கர்த்தருக்குக் கீழ்ப்படிந்து அவ ரிடத்தில் உண்மையாயிருப்பவர்கள், ஒரு நாளில் பரலோகத்திற்கு எடுத்துச் செல்லப்படுவார்கள். அங்கே அவர்கள் ஒருபோதும் மரிப்பதில்லை.

பரலோகம் பற்றி முழுமையாக புரிந்து கொள்வது என்று வரும்போது உண்மையாகவே, அது நம்முடைய புரிந்து கொள்ளுதலுக்கு அப்பாற் பட்டது. எனவே, நாம் அதை விசுவாசத்தினால் ஏற்றுக்கொண்டு, பரலோகம் நடைமுறை சாத்தியமாகும் வரைக்கும் அந்த வேளையை நோக்கிக் கடந்து சென்று கொடிருக்கிறோம். தேவன் கனவுக்கும், கற்பனைக்கும் மேலாகத் தந்தருளுவார் என்பதில் நமக்கு நம்பிக்கை இருக்கிறது.

பரலோகம் செல்ல உங்களுக்கு விருப்பமில்லையா? ஒரு நாளில் நீங்கள் தேவனோடு வாழ வேண்டாமா? இந்தப் பூலோக வாழ்க்கையே பரலோகத்திலும் இருந்தால் அது எவ்வளவு பயங்கரமாயிருக்கும். இங்கே அநேக பிரச்சனைகளும், தொந்தரவுகளும், இதயத்தை வலிக்கச் செய்யும் பல சூழ்நிலைகளும் இருக்கின்றன. ஆனால், இந்த வாழ்க்கைக்கு அப்பால் ஒரு சிறந்த உலகத்தை நம்மால் எதிர்நோக்க முடிந்தால், இந்த வாழ்க்கையை எப்படியோ நாம் கழித்து விட முடியும்.

நீங்கள் கிறிஸ்தவராக இல்லையென்றால் நீங்கள் இழந்து போன நிலையில் இருக்கிறீர்கள்; கல்லறைக்கு அப்பால் உங்களுக்கு எந்த நம்பிக்கையும் இல்லை. இதை நீங்கள் உணர்ந்து அதை சரி செய்யும்படி முயற்சிக்க நான் ஜெபிக்கிறேன். நீங்கள் இயேசுவை விசுவாசித்து, உங்கள் விசுவாசத்தை அறிக்கையிட்டு, இரட்சிக்கப்பட்டு ஒரு நாள் பர லோகம் போவதற்கான நம்பிக்கையைப் பெற்றுக் கொள்ள முடியும் (மாற்கு 16 : 16). இதை நீங்கள் செய்தால் கர்த்தர் உங்களை இரட்சிப்பது மாத்திர மல்ல, உங்களைத் தம்முடைய சபையிலும் சேர்த்துக் கொள்வார் (அப். 2 : 47). உங்களுக்கு நேரமும், வாய்ப்பும் இன்னும் இருக்கிறபடியால் நீங்கள் அப்படிச் செய்யும்படி நாங்கள் ஜெபிக்கிறோம்.

பெண்கள் பகுதி

# அன்னாளின் துதி ஜெபம்

Sis. ரேச்சல் இராஜநாயகம்

கிறிஸ்துவுக்குள் அருமையான சகோதரிகளே! கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஸ்தோத்திரங்களை ஏறெடுத்துக் கொள்ளுகிறேன். நம் வாழ்க்கையில் நாம் பெற்றுக் கொண்ட அநேக காரியங்களுக்கு நன்றி சொல்லக் கடன்பட்டிருக்கிறோம். ஆனால், பொதுவாக நாம் அப்படிச் செய்வதில்லை. பிறர் நமக்குச் செய்யக் கடமைப்பட்டவர்கள் என்று எண்ணிக் கொள்கிறோம். இந்த மனோபாவத்தை மாற்றிக் கொண்டு தேவனுக்கு பிரியமானதைச் செய்ய நாம் தயாராகிக் கொள்ள வேண்டும்.

இங்கே அன்னாளின் அங்கலாய்ப்பை சாமுவேல் முதலாம் அதிகாரம் நன்றாக விவரிக்கிறது. ஜெபத்தின் வல்லமையை அன்னாளின் மூலம் நாம் உணர முடிகிறது. ஜெபத்தின் பலனால் கிடைத்த சாமுவேலை மீண்டும் அவனைத்தந்த தேவனுக்கே ஒப்புக்கொடுத்து விட்டாள். அதுவும், அன்னாள் கேட்டதும் கர்த்தருக்கென்று கேட்டாள், கேட்டபடியே அவன் உயிரோடிருக்கும் சகல நாளும் கர்த்தருக்கே ஒப்புக்கொடுத்து விட்டாள். தான் நேர்ந்துகொண்டதிலே உண்மையாயிருந்தாள். முழு மனதோடும், மகிழ்ச்சியோடும் ஒப்புக் கொடுத்தாள். அதன் பிறகுதான். இரண்டாம் அதிகாரத்தில் ஜெபத்திலே தேவனைத் துதிக்கிறாள். துதித்துப் பாடுகிறார்கள். நன்றியும், துதியும், தீர்க்கதரிசனமுமாக அப்பாடல் இருந்தது. இப்பொழுது அன்னாளின் துதி பாடலை இங்கே கவனிப்போம்.

**1. என் கொம்பு கர்த்தருக்குள் உயர்ந்திருக்கிறது என்றாள்.**

இது கர்த்தரை உயர்த்திக் காட்டுகிறது. அவருடைய வார்த்தைகளில் கொம்பு என்பது வல்லமையானதும், உயர்வானதும் தலைக்கு மேலாகப் பயன்படுத்துவதுமான ஓர் அணிகலன். முதல் முதலாக இந்த வார்த்தை இங்கு பயன்படுத்தப்பட்டுள்ளது. இரண்டாவதாக, தாவீது தன் சத்துருக்களின் கைக்கு நீங்கலாக்கி இரட்சித்த கர்த்தருக்கு முன்பாகப் பாடினபோது " தேவன் நான் நம்பியிருக்கிற துருகமும், என் கேடகமும், என் இரட்சண்யக் கொம்பும் என்று பாடுகிறார்.(II சாமு 22 : 3) சங்கீதம் 112 : 9 - ல் வாரியிறைத்தான், ஏழைகளுக்குக் கொடுத்தான், அவனுடைய நீதி என்றென்றைக்கும் நிற்கும். அவன் கொம்பு மகிமையாய் உயர்த்தப்படும் என்று ". இது உயர்ந்த ஓர் நிலையை குறிக்கிறது. அன்னாள் வாயைத் திறந்து தன் இரட்சிப்பின் சந்தோஷத்தை வெளிப்படுத்துகிறாள்.

**2. கர்த்தரைப் போல் பரிசுத்தமுள்ளவர் இல்லை.**

அவரன்றி வேற தேவர்கள் இல்லை. ஓசியா தீர்க்கன் தேவனைப் பற்றிச் சொல்லும்போது, " நான் மனுஷனல்ல, தேவனாயிருக்கிறேன். நான் உன் நடுவில் உள்ள பரிசுத்தர் என்கிறார். தேவனுடைய பரிசுத்தம் என்பது எல்லாக் காலத்திலும் இருந்து கொண்டேயிருக்கும் ஓர் குணம் அல்லது பண்பு. (எசே. 20 : 41; 28 : 22 ; 36 : 23 ; லேவி 10 : 3) மேலும், தேவன் கன்மலை என்கிறாள். உபா : 32 4 – ல் முதல் முதல் **கன்மலை** என்று பேசப் படுகிறார். கன்மலை என்றால் உறுதியானது. பலம் வாய்ந்தது. மனிதர்கள் கைவிடும்போது நம்மைக் காப்பது. இப்படி தேவனை அன்னாள் பல வகைகளில் உணர்ந்து கன்மலை என்று சொல்லிப் பாடுகிறாள்.

**3. கர்த்தர் ஞானமுள்ள தேவன்**

அன்னாளுக்கு பிள்ளையில்லாதிருந்தபடியால் அவளின் சக்களத்தி பெனின்னாள் அவள் துக்கப்படும்படியாக மிகவும் விசனப்படுத்துவாள். மனமடினாக்குவாள். ஆனால் தேவன் ஞானத்தில் பெரியவர். அவர் இருதயங்களை நிறுத்துப்பார்க்கிறார். ( நீதி 21 : 2 ) சரியாக நிர்ணயிக் கிறவரும் அவர்தான். அவருக்கு அனைத்தும் தெரியும்!

**4. பலவான்களின் வில் முறிந்தது.**

இந்த வசனங்களில் அன்னாள் கவிதை நடையிலும், உருவக நடை யிலும் பேசுகிறாள். தன் கடந்த கால துக்கங்களை, துயரங்களை வெளிப்ப டுத்துகிறாள். திருப்தியாயிருந்தவர்களை, பசியாயிரார்கள், ஏழு என்ற வார்த் தைகள் எல்லாம் உருவக நடையில் எழுதப்பட்டவைகள். ஏழு என்றால் வெறுமனே ஏழு என்ற எண் அல்லாமல் ஒரு முழுமையைக் குறிக்கிறது.

**5. கர்த்தர் கொல்லுகிறவரும், உயிர்ப்பிக்கிறவருமாயிருக்கிறார்.**

வாழ்வு, சாவு ஆகிய இரண்டின் மேலும் தேவனுக்கு அதிகாரம் இருக்கிறது. பாதாளத்தில் இறங்கவும், அங்கிருந்து ஏறவும் பண்ணும் வல்லமையை அவர் பெற்றிருக்கிறார். மனிதன் ஆவி, சரீரம் என்ற இரண்டினாலும் ஆக்கப்பட்டவன். மரிக்கும்போது சரீரம் மண்ணுக்கும், ஆவி தன்னைத் தந்த தேவனிடத்திற்கும் செல்லுகிறது. ( பிரசங்கி 12 : 7 ) இப்பேருண்மையை அன்னாள் அறிந்திருந்தாள்.

**6. அவர் சிறியவனைப் புழுதியிலிருந்து எடுத்து எளியவனைக் குப்பையிலிருந்து உயர்த்துகிறார்.**

7, 8 வசனங்களில் பார்க்கும்போது, தேவனுடைய வல்லமையை அன்னாள் அப்படியே உணர்ந்து துதிக்கிறாள். பார்வோனுக்கும், எகிப்தி யருக்கும் ஏற்பட்ட அழிவு ( உபா : 7 : 18 ) அவள் நினைவுக்கு வருகிறது. பெனின்னாள் குறித்து அவள் கொஞ்சம் கூட பயப்படவில்லை. அன்னாள்

தன் இருதயத்தை ஊற்றி ஏறெடுத்த ஜெபத்தின் மூலம் பெனின்னாளை முழுவதுமாக மேற்கொண்டாள். யோபு 2 : 8 ல் " அவன் ஒரு ஓட்டை எடுத்து தன்னை சுரண்டிக் கொண்டு, சாம்பலில் உட்கார்ந்தான் " என்று வாசிக்கிறோம். ஏசாயா 47 : 1 ; சங் : 113 7 - 9 ஆகிய வசனங்களில் பார்க்கிறபடி, அன்னாள் தன் நிலையை ஒத்துக் கொண்டு தரைமட்டும் தாழ்த்தி மன்றாடி, ஜெபித்ததினிமித்தம் தன் தேவனிடத்தில் எதையும் மறைக்காமல் சொல்லிச் சொல்லி துதிக்கிறாள். தாங்களாகவே தங்களுக்கு உதவி செய்து கொள்ள முடியாமல் தவிப்பவர்களுக்கு தேவன் தம்முடைய நீதியை விளங்கப் பண்ணுகிறார். பூமியின் அஸ்திபாரங்கள் கர்த்த ருடையவைகள். அவரே அவைகளின் மேல் பூச்சக்கரத்தை வைத்தார். தம்முடைய வார்த்தையின் வல்லமையினாலே பூமியை உண்டாக்கினார் என்ற அவருடைய வர்ணிப்பு மிக நேர்த்தியானது. அழகானது, பூமியின் அஸ்திபாரங்களை பூச்சக்கரத்தின் மேல் வைத்தவருக்கு அன்னாளின் நிந்தையை நீக்குவது லேசான காரியம். எவ்வளவு நன்றி உடையவள் அன்னாள். தேவனிடத்திலிருந்துதான் சகல ஆசீர்வாதங்களும் வருகிறது என்று முழுமையாக நம்பினாள் இந்த அன்னாள்.

**7. அவர் தமது பரிசுத்தவான்களின் பாதங்களைக் காப்பார்.**

தேவன் தன் பிள்ளைகளை கவனித்து, வழிநடத்தி, பாதைகாட்டிக் காப்பாற் றுவர். தேவனுடைய பிள்ளைகளை எதிர்க்கிறவர்கள் தோற்றுப் போவார்கள்.

**8. கர்த்தரோடே வழக்காடுகிறவர்கள் நொறுக்கப்படுவார்கள்.**

வானத்திலிருந்து முழங்குவார். ( " I சாமு : 7 : 10 ) .... கர்த்தர் மகா பெரிய இடி முழக்கங்களால் பெலிஸ்தர்மேல் அந்நாளிலே முழுங்கப் பண்ணி அவர்களைக் கலங்கடித்ததினால், அவர்கள் இஸ்ரவேலுக்கு முன்பாகப் பட்டு விழுந்தார்கள்." என்று பார்க்கிறோம். தாம் தெரிந்து கொண்டவர்களை அபிஷேகம் பண்ணுகிறார் என்பது யூதர்கள் காலத்து வழக்கம். தீமை செய்கிறவர்கள் மேல் தேவனுடைய நியாயத்தீர்ப்பு இருக்கிறது. புதிய ஏற்பாட்டில் பார்க்கும்போது " அவனவன் செய்த நன்மைக்காவது, தீமைக்காவது தக்க பலனை அடைவான் ". ( II கொரி 5 : 10) என்று வாசிக்கிறேம்.

அருமையானவர்களே! அன்னாளின் துயரம், நிந்தை, கிலேசம் இவைகளின் மூலம் தன் இருதயத்தைத் தேவனிடத்தில் ஊற்றியது, பின்பு தேவன் அவளுக்கு இரங்கி குமாரனை கொடுத்து, தான் கேட்டுக் கொண்ட படியே மீண்டும் தேவனுக்கே அந்தப் பிள்ளையை ஒப்படைத்து பற்றி அறிந் தோம். ஒப்படைத்துவிட்டு அரைமனதோடல்லாமல் முழுமனதுடன் மனதார தேவனைத் துதித்து நன்றி சொல்லிப் புகழ்ந்து, உயர்த்திப் பாடிய இந்தப் பாடல் மூலம் நாம் சில பாடங்களைப் படித்தோம். நாம் எப்படி? பெரிய கேள்வி நம்முன்இருக்கிறது. சிந்திப்போம். செயல்படுவோம். ஆமென். ●

வாலிபர் பகுதி

# கர்த்தருடைய ஊழியத்திற்கென்று கொடு

*சகோ. பென்னி மார்ட்மன்*

பிரியமானவர்களே, தேவன் நமக்கு எத்தனையோ நன்மைகளைச் செய்திருந்தாலும் தேவன் எனக்கு எதையுமே செய்யவில்லை என்று நன்றி கெட்டவர்களாய் அநேக வேளைகளில் நாம் அங்கலாய்த்துக் கொள் கிறோம். இந்தப் பூமியில் நமக்கு தேவன் உணவு, உடை, இருப்பிடம் போன்றவற்றைக் கிருபையாக தந்திருக்கும் போது, மேலும் மேலும் பலர் அவைகளைப் பெற்றுக் கொள்வதிலேயே குறியாக இருக்கின்றனர். தேவன் நம்மீது அன்பு வைத்த படியினால்தான் தம்முடைய ஒரே பேறான குமாரனாகிய இயேசுவை நமக்காக அனுப்பிக் கொடுத்தார். இயேசுவும் நம்மில் அன்பு கூர்ந்த படியினால் தான் நமக்காக தம்முடைய ஜீவனையே விட்டார். சங்கீதக்காரன் " கர்த்தர் எனக்குச் செய்த எல்லா உபகாரங் களுக்காகவும் அவருக்கு என்னத்தைச் செலுத்துவேன் " என்றார். (சங்கீதம் 116:12 ). இங்கே சங்கீதக்காரன் கர்த்தர் தன்னை அபரிதமாக ஆசீர்வதித்ததை உணர்ந்து பேசியிருக்கிறதை நாம் காண முடியும்.

நாமும் கூட தேவன் நமக்கு செய்த நன்மைகளை நினைத்து அதற்குப் பதிலாக அவருக்காக நாம் செய்யப்போகிற காரியத்தை குறிப்பாக சிந்தித்துப் பார்க்க வேண்டும். நம்முடைய முழுபலத்தோடு அவருக்கு சேவை செய்ய வேண்டும், தேவன் நமக்குக் கொடுத்திருக்கிற தாலந்துகளையும், நேரத் தையும் தேவனுக்காகப் பயன்படுத்த வேண்டும். சுருக்கமாகச் சொல்லப் போனால் நம்மை முழுமையாக அவருக்கென்று அர்ப்பணிக்க வேண்டும். தேவன் நமக்கு செய்த நன்மைகளை நினைத்து அவருக்குக் கீழ்ப்படிய வேண்டும். வாங்குகிறதைப் பார்க்கிலும் கொடுக்கிறதே பாக்கியம் என்று கர்த்தராகிய இயேசு சொன்ன வார்த்தைகளை நாம் மறந்து விடக்கூடாது (அப். 20:35 ). எனதருமை வாலிபர்களே, தேவன் உங்களுக்கு என்ன செய்தார் என்பதைக் காட்டிலும் நீங்கள் தேவனுக்கு என்னச் செய்தீர்கள் என்பதை சிந்தித்துப் பாருங்கள். உங்களுக்கு உண்டானவற்றையெல்லாம் தேவனுக்குக் கொடுங்கள். எப்படி மண்ணைத் தோண்ட தோண்ட தண்ணீரின் அளவு பெருகுமோ அதேப்போல் நாம் கர்த்தருடைய ஊழி யத்திற்கென்று கொடுக்க கொடுக்க கர்த்தர் நம்மை ஆசீர்வதிக்கும் அளவும் பெருகும். கர்த்தரின் ஆசீர்வாதமே ஐசுவரியத்தைத் தரும் என்பதை நாம் நம் வாழ்க்கையில் அனுபவித்துப் பார்க்க கர்த்தருக்கென்று கொடுக்க வேண்டும். இப்போது நாம் முதலில் தன்னையும், இரண்டாவது தனக்கு உண்டான

எல்லாவற்றையும் கர்த்தருக்குக் கொடுத்த பர்னபாவிடமிருந்து சில பாடங்களை நாம் கற்றுக் கொள்ளலாம்.

## I. நிலத்தை விற்று கர்த்தருக்குக் கொடுத்தான்

ஆதித் திருச்சபையின் விசுவாசிகள் ஒரே மனமுள்ளவர்களாயிருந் தார்கள். ஒருவனாகிலும் தனக்குண்டானவைகளில் ஒன்றையும் தன்னு டைய தென்று சொல்லவில்லை. சகலமும் அவர்களுக்குப் பொதுவாயிருந் தது. உடனே நீங்கள் ஆதிக்கிறிஸ்தவர்கள் கம்யூனிசக் கொள்கையை பின் பற்றினார்கள் என்று நினைத்துவிட வேண்டாம். அவர்கள் ஒருவருக் கொருவர் அன்பாயிருந்தபடியால் மற்றவர்களுடைய தேவைகள் சந்திக்கப் பட வீடுகளையும், நிலங்களை உடையவர்கள் அவைகளையும் விற்று விற்கப்பட்ட வைகளின் கிரயத்தைக் கொண்டு வந்து அப்போஸ்தலருடைய பாதத்தில் வைத்தார்கள். இதனிமித்தம் ஒருவருக்கும் ஒன்றும் குறைவுபட வில்லை. அந்த முதல் நூற்றாண்டு கிறிஸ்தவர்கள் ஒருவருக்கொருவர் உண்மையான அக்கறை உடையவர்களாயிருந்திருக்கிறார்கள். தரித் திரருக்குக் கொடுப்பவன் தாழ்ச்சியடையான் என்று (நீதிமொழிகள் 28 : 27) ல் சொல்லப் பட்டிருக்கிறவைகளை சபையார் சபை ஆரம்பிக்கப்பட்ட நாட்க ளிலேயே செயல்படுத்தியிருக்கிறார்கள். ஆனால், சபை ஸ்தாபிக்கப்பட்டு இருபது நூற்றாண்டு கள் உருண்டோடிய பின்னும் இந்த இருபத்தொன் றாம் நூற்றாண்டில் கிறிஸ்தவர்கள் ஒருவருக்கொருவர் அக்கறை இல்லாமலும், உதவி செய்யும் மனப்பான்மையும், ஒட்டுமொத்தமாக ஐக்கியமும் இல்லாமல் இருப்பது இவர்களும் கிறிஸ்தவர்கள்தானா என்கின்ற ஐயத்தை ஏற்படுத்துகிறது.

சரி, நாம் மறுபடியும் முதல் நூற்றாண்டிற்கே திரும்பிச் செல்வோம். கிறிஸ்துவை நம்பி, தனக்கு உண்டானவைகளை எல்லாம் பொதுவிலே வைத்து, புத்துணர்ச்சியுடன் புதுப்பொலிவு பெற்று சபையை சீராட்டி, பாராட்டி, வளர்த்து வந்த சீஷர்களில் ஒருவனாகத்தான் நாம் பார்க்கப்போகிற பர்னபா என்னும் மறுபேர் பெற்றவனுமாகிய யோசே இருந்தான். இந்த யோசேக்கு அப்போஸ்தலர்கள் “ ஆறுதலின் மகன் ” என்று அர்த்தங் கொள்ளும் பர்னபா என்னும் பெயரை வைத்தார்கள். அவர்கள் இந்தப் பெயரை யோசேக்கு வைத்தது எவ்வளவுப் பொருத்தமானது என்று நாம் பின்பு உணர்ந்து கொள்வோம். முதலாவது, இந்த பர்னபா ஒரு லேவியனாய் இருந்திருக்கிறான் ( அப். 4:36 ) லேவி கோத்திரத்தை தேவன் தம்முடைய ஆசாரிய ஊழியத்தைச் செய்யும்படியாகத் தெரிந்தெடுத்திருந்தார் (எண்ணா கமம் 3:9-13 ). லேவியர்களுக்கென்று பரிசுத்த நியமத்தில் பங்கொன்று மில்லை என்று எண்ணாகமம் 18:20-24. வசனங்களில் பார்க்கிறோம். அப்படியிருக்கும் போது லேவியனான பர்னபாவுக்கு நிலம் எங்கே இருந்து வந்தது? என்ன காதில் பூ சுற்றுகிறீர்கள் என்கிறீர்களா? பர்னபாவின் சொந்த ஊர் சீப்புருத்தீவு அப். 4:36. எனவே, தன்னுடைய சொந்த ஊரிலே

பர்னாபாவுக்கு சொந்த நிலம் இருந்திருக்க வேண்டும். அதை விற்றுதான் பர்னபா அப்போஸ்தலர்களிடம் கொடுத்திருக்கிறான். மண்ணுக்காக, பொன் னுக்காக விண்ணச் சிந்தையைவிட்டு சண்டையிட்டுக் கொண்டிருக்கின்ற இந்த நாட்களில் தன்னுடைய சொந்த நிலத்தை விற்று சபையாருக்கு உதவியிருக் கும் இந்த பர்னபா வெள்ளித்தட்டில் வைக்கப்பட்ட பொற் பழமாய் திகழ்கிறான்.

### II **தன்னலமில்லாமல் கர்த்தருக்குக் கொடுத்தான்**

பர்னபா எருசலேம் சபையார் மீது தனக்கிருந்த தணியாத நேசத்தினி மித்தம் தனக்கு உண்டாயிருந்த நிலத்தை விற்று, அதில் தனக்கென்று ஒன்றையும் வைத்துக் கொள்ளாமல் அதின் கிரயத்தைக் கொண்டு வந்து அப்போஸ்தலருடைய பாதத்திலே வைத்தான். இன்று சமுதாய சீர்திருத்த நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்கள், சமூக சேவை செய்பவர்கள் தங்கள் நிலங்களை விற்று பிறருக்கென்று உதவி செய்வதை அரிதாகத்தான் காண முடியும். இப்படி உதாரத்துவமாய் பர்னபா கொடுத்ததினால் எந்த வகையிலும் அவன் குறைந்து போகவில்லை. தேவன் பர்னபாவை மிக வல்லமையாக எடுத்து ஊழியத்தில் பயன்படுத்தியிருக்கிறார். சொல்லப் போனால் பவுல் மனமாற்றமடைந்து மற்ற அப்போஸ்தலர்களோடு தன்னைச் சேர்த்துக் கொள்ள முயற்சித்த போது இந்த பர்னபா தான் பவுலை மற்ற அப்போஸ்தலர்களிடம் அறிமுகம் செய்து வைத்தான். (அப். 92:26,27 ). ஊழியத்தின் பாதையில் மற்றவர்களையும் முன்னேற்றும் முனைப்புடையவனாக பர்னபா திகழ்ந்திருக்கிறான். அதோடு கூட, பர்னபா வின் ஊழிய வாஞ்சையைக் கண்டறிந்த எருசலேம் சபையார் அந்தி யோகியா பட்டணத்தில் அநேக ஜனங்கள் விசுவாசிகளாகி கர்த்தரிடத்தில் திரும்பினதைக் கேள்விப்பட்டு பர்னபாவை அந்தியோகியா சபைக்கு அனுப்பி வைத்தார்கள். பர்னபா அங்கே போய்ச் சேர்ந்து தேவனுடைய கிருபையைக் கண்டபோது, சந்தோஷப்பட்டு, கர்த்தரிடத்தில் மனநிர்ணயமாய் நிலைத் திருக்கும்படி எல்லோருக்கும் புத்திச் சொன்னான் (அப். 11:21-23).

இந்த பர்னபா மத்தேயு 19 ஆம் அதிகாரத்தில் நாம் காணும் அந்தப் பணக்கார வாலிபனிடமிருந்து முற்றிலுமாக வேறுபடுகிறான். ஏனென்றால், அந்த வாலிபன் எத்தனையோ நற்குணங்களைப் பெற்றிருந்தாலும் இயேசு அவனைப்பார்த்து உனக்கு உண்டானவைகளை விற்று, தரித்திரருக்குக் கொடு என்று சொன்னபோது துக்கத்தோடு போய்விட்டான் என்று பார்க்கி றோம். ஆனால், பர்னபா தன்னிடம் இருந்த எல்லாவற்றையும் இயேசு கிறிஸ்து கேட்காமலேயே இல்லாதவர்களுக்கு கொடுத்து கொடைவள்ளலாக திகழ்கிறான். பிரியமான வாலிப சகோதர, சகோதரிகளே நாம் கர்த்தருடைய பிள்ளைகளுக்கும், கர்த்தருடைய ஊழியத்திற்கென்றும் உற்சாகமாய்க் கொடுக்கும் போது நம்மை ஆராயந்தறியும் தேவன் நம்மை அபரிதமாக ஆசீர்வதிப்பாராக!. ●

சிறுவர் பகுதி

# காணாமல் போன ஆடு...

Bro. ஏபில் நாயகம்

**எ**னக்குப் பிரியமான பிள்ளைகளே! உங்கள் யாவருக்கும் இறைமகன் இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள். அனைவரும் நலமாக இருப்பீர்கள் என விசுவாசிக்கிறேன். நானும் நலமாக உள்ளேன். அன்புப் பிள்ளைகளே, உங்களுக்குப் பிடித்த ஒரு விளையாட்டுப் பொருளை நீங்கள் தொலைத்துவிட்டால் என்ன செய்வீர்கள்? மிகவும் கவலைப்படுவீர்கள் தானே? அதேசமயம் அதைத் தேடி கண்டுபிடித்து விட்டால்.. அப்பப்பா.. அதிக சந்தோஷம் அடைவீர்கள். அப்படித் தானே?! சரி, இதை அப்படியே மனதில் வைத்துக் கொண்டு, இந்த மாதத்திற்கான வேதபகுதியை வாசியுங்கள். சீக்கிரம் வாசியுங்கள் லூக். 15:1 - 7 வரை வாசித்துவிட்டீர்களா?

இயேசுவின் வார்த்தைகளைக் கேட்பதற்காகத் திரளான ஜனங்கள் அவரைப் பின்தொடர்ந்து வந்தார்கள். அந்த கூட்டத்தில் “ ஆயக்காரரும், பாவிகளும் ” மற்றும் “ பரிசேயரும், வேதபாரகரும் ” தங்களை நீதிமான்கள் என்று எண்ணிக் கொண்டு, பாவிகளுக்கு விலகி இருந்தார்கள். அந்தச் சமயத்தில் நம்முடைய இயேசு பாவிகளோடு பழகவும், அவர்களோடு சாப்பிடவும் செய்தார். இதைப் பார்த்த பரிசேயரும் வேதபாரகரும் “என்னடா, இவர் பாவிகளோடு சாப்பிடுகிறாரே ” என்று தங்களுக்குள்ளே சொல்லிக் கொண்டு முணுமுணுத்தார்கள். (வ. 1, 2 ).

அதை அறிந்த இயேசு, அவர்களுக்கு ஒரு பாடம் புகட்ட முயன்றார், தேவனைப் பற்றியும், தன்னைப் பற்றியும் அவர்கள் தவறான எண்ணம் கொண்டிருக்கிறார்கள் என்று புரிந்து கொண்டு, ஓர் உவமையை அவர்களுக்குச் சொன்னார்.

அந்த உவமை என்னவென்றால், ஒரு மனிதனுக்கு 100 ஆடுகள் இருந்து, அவைகளில் ஒன்று தொலைந்து போனால், காணாமல் போன அந்த ஒரு ஆட்டைக் கண்டுபிடிக்கும் வரைக்கும் அவன் தேடுவானல்லவா? என்று முணுமுணுத்தவர்களைப் பார்த்துக் கேட்டார். அவர்களும் “ ஆம் ” என்று தான் சொல்லி இருப்பார்கள். அப்படி தேடி கண்டுபிடித்து விட்டால்

அவன் மிகவும் சந்தோஷப் படுவான் என்று கூறினார். சந்தோஷத்தின் மிகுதியால் அதைத் தன் தோளில் சுமந்து அந்த சந்தோஷத்தைத் தன் சிநேகிதர்களிடத்திலும் அயலகத்தாரிடத்திலும் பகிர்ந்து கொள்வான் என்று சொன்னார்.

வ – 7ல் – " அதுபோல, மனந்திரும்ப அவசியமில்லாத தொண்ணூற்றொன்பது நீதிமான்களைக் குறித்துச் சந்தோஷம் உண்டாகிறதைப் பார்க்கிலும் மனந்திரும்புகிற " ஒரே " பாவியினிமித்தம் பரலோகத்தில் மிகுந்த சந்தோஷம் உண்டாயிருக்கும் " என்று சொன்னார்.

பிள்ளைகளே! வேதாகமம் நம்மை சில சமயம் நாம் ஆடுகளைப் போல தேவனிடத்திலிருந்து வழி தவறிப் போகிறோம் என்று கூறுகிறது. அப்படி வழி தவறிப் பிசாசின் வழியில் செல்வது தேவனுக்கு மிகுந்த கவலையை அளிக்கிறது. ஆனால் அவர் நம்மை விட்டுவிடுவதில்லை. நம்மைத் தேடி எப்படியாவது கண்டு பிடிக்க முயற்சிக்கிறார். தன் கரத்தோடு பிடித்துக் கொள்ள அவர் விரும்புகிறார். காணாமல் போனவர்களைக் கண்டுபிடித்து சேர்த்துக் கொள்ளத்தான் தன் சொந்த மகனாகிய இயேசுவை அனுப்பினார். பாருங்கள் நம் தேவனின் அன்பை!! அந்த உவமையில் காணாமல் போன ஆடு கிடைத்தவுடன் " இயேசு அதைத் தன் தோள்களின் மீது " சுமக்கிறார்.

நம் இயேசு எவ்வளவு அன்பானவர் பாருங்கள்! இந்த இயேசுவை நாம் அதிகம் அதிகமாக அறிந்து, அவருக்குப் பிரியமாய் வாழ்ந்தால், நம்மையும் தோளில் சுமந்து பாதுகாப்பாகவும், ஆசீர்வாதமாகவும் வழி நடத்துவார். இந்த உண்மையை நம் சிறு பிராயத்திலேயே கற்றுக் கொள்வோம். சரியா? ●

## நாளும் நடப்பும்

- நியுசிலாந்தில் பயங்கர நிலநடுக்கம். மீண்டும் சுனாமி எதிரொலி.
- ரூ. 500, ரூ. 1000 பழைய நோட்டுகள் செல்லாது என்ற மத்திய அரசின் திடீர் அறிவிப்பால் நாடு முழுவதும் மக்கள் திண்டாட்டம்.
- அமெரிக்க அதிபர் தேர்தலில் குடியரசு கட்சியைச் சேர்ந்த டொனால்ட் ட்ரம்ப் வெற்றி பெற்றார்.
- தமிழகத்தில் வடகிழக்குப் பருவமழை சராசரிக்குக் குறைவாகவே பெய்துள்ளது.
- இந்தியா – இங்கிலாந்து இடையே டெஸ்ட் கிரிக்கெட் தொடர் நடந்து வருகிறது.

# தேவனுடைய பெட்டியிலிருந்து!

Bro. பாண்டியன்

ஆண்டவர் இயேசுவின் நாமத்தில் உங்களுக்கு வாழ்த்துதலும், சமா தானமும் உண்டாவதாக! உலகில் தேவர்கள் என்னப்பட்டவர்கள் அநேகர் இருந்தாலும் நாம் ஆராதிக்கும் தேவன் மேலானவராக இருக்கிறார். அவரு டைய பல சிறப்புகளில் ஒன்று மனித குலத்திற்கான சட்ட திட்டங்களை அவர்கள் நன்மைக்காகப் பின்பற்றும்படி தெளிவாகவும் நுணுக்கமாகவும் வகுத்துக் கொடுத்திருப்பது. உலகில் வேறு எந்த தெய்வத் திற்கும் இல்லாத சிறப்பு இதுவாகும். அப்படி வகுத்துக் கொடுத்த சட்டங்கள் அடங்கியது தான் பரிசுத்த வேதாகமம். இது முதலாவதாக, இஸ்ரயேல் ஜனங்களுக்காக சீனாய் மலையின் மீது மோசேயின் மூலமாக தேவனால் தொகுத்தளிக்கப் பட்டது. தேவன் தமது சட்டங்களையும், பிரமாணங்களையும் மனிதன் மறந்து போகாமல் " நினைவு கூர வேண்டும் " என்பதற்காகவும், அது மனிதனுடைய உலக வாழ்க்கைக்கு மிகவும் அவசியமான, " வழி நடத்தும் கையேடு " போல் இருப்பதால் அதை வைப்பதற்காக ஒரு பெட்டியை ஆயத்தம் பண்ண மோசேயைப் பணித்தார். அதுவே உடன்படிக்கைப் பெட்டி, சாட்சிப் பெட்டி, என்றழைக்கப்படும் தேவனுடைய பெட்டியாகும். அதன் மூலம் நாம் கற்றுக் கொள்ளக்கூடிய சில பாடங்களை நாம் இங்கு காணலாம்.

இஸ்ரயேல் ஜனங்களுக்கான சட்டம் ஓரேப் என்னும் தேவனுடைய பர்வதத்திலுள்ள சீனாய் மலை மீது மோசேயிடம் ஒப்படைக்கப்பட்டது. இவற் றில் பிரதானமாக பத்துக் கட்டளைகள் அல்லது பத்துக்கற்பனைகள், கற்பலகைகளில் தேவனுடைய விரலினால் எழுதப்பட்டு மோசேயிடம் கொ டுக்கப்பட்டது. அதை இஸ்ரயேல் ஜனங்களுக்கு நினைப்பூட்டுதலாக வைக் கவே தேவன் சித்தீம் என்னும் மரத்தாலான ஒரு பெட்டியை இரண்டரை முழ நீளம், ஒன்றரை முழ அகலம் மற்றும் ஒன்றரை முழ உயரத்தில் செய்யக் கட்டளையிட்டார். யாத் 25 : 10 – 16 அது உள்ளும் புறம்பும் பசும் பொன்த கட்டால் மூடப்பட்டு அதை யாரும் லேசில் தொட்டுவிடாதபடி தண்டுகளால் சுமக்க வழிமுறை கொடுக்கப்பட்டது. அதைத்தான் அன்றைக்கு கைபர், போலன் கணவாய் வழியாக மாடு மேய்க்க இந்தியாவுக்குள் நுழைந்த ஆரியர்கள் விக்கிரகங்களை சுமக்க நம் ஜனங்களுக்குக் கற்றுக்

கொடுத்திருக்கிறதைக் காண்கிறோம். ஆனால் வேதத்தில் சொல்லப் பட்டிருக்கும் தேவனுடைய பெட்டியை சுமக்க லேவியர்களுக்கு மட்டும் பணிக்கப்பட்டது. இதன் விசேஷித்த நோக்கம் தேவன் தம்முடைய வார்த்தைகளுக்கு முக்கியத்துவம் அளிப்பதாகும் ( ஏசா 42 : 21). புதிய ஏற்பாட்டில் எபி 9 : 1 - 5 வசனப் பகுதியில் மூன்று வித காரியங்கள் தேவனுடைய பெட்டியில் இருந்ததைக் காண்கிறோம். **மன்னா வைத்த பொற்பாத்திரம்**, **ஆரோனின் தளிர்த்த கோல்** மற்றும் **உடன்படிக்கையின் கற்பலகைகள்** என்பதே அவை. மன்னா என்பது தேவன் நம்முடைய கற்பனைக்கெட்டாத அளவில் தம்முடைய ஜனங்களை போஷிக்க வல்லவர் என்பதையும், ஆரோனுடைய கோல் தம்முடையவர்களை அவர் முன் குறித்து தெரிந்து கொள்கிறவர் என்பதையும் நமக்கு வெளிப்படுத்துகிறது. இன்றும் நாம் கிறிஸ்துவுக்குள் உலக தோற்றமுதல் தெரிந்து கொள்ளப் பட்டவர்கள் எபேசி 1 : 4 (எபேசி 1 : 4) என்றும், தெரிந்து கொள்ளப்பட்ட சந்ததி மற்றும் அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள் என்றும் ( 1 பேது 2 : 9) சொல்லப்பட்டிருக்கிறது.

உடன்படிக்கை பெட்டியின் வரலாற்றை நாம் காணும் போது சில பாடங் களை நாம் கற்றுக்கொள்கிறோம். **முதலாவது**, நம் கவனத்தை ஈர்ப்பது தேவ னுடைய பெட்டியின் " பரிசுத்தமாகும் ". இதை வைப்பதற்குத்தான் தேவன் சில அளவுகள் குறிப்பிட்டு ஆசரிப்புக் கூடாரத்தை உண்டு பண்ணச் சொன் னார். அந்தப் பெட்டியின் மேற்புறத்தில் பரலோக சாயலுக்கு ஒப்பாக கிருபா சனமும், பொன் தகட்டால் ஆன இரண்டு கேரூபின்களும் வைக்கப்பட்டது. இப்பெட்டி மனுஷர் சுலபத்தில் நெருங்க முடியாதபடி ஆசரிப்புக் கூடாரத் திலுள்ள பரிசுத்த ஸ்தலத்தைத் தாண்டி ஒரு பெரிய திரைச்சீலையின் மறைவில் " மகா பரிசுத்த ஸ்தலம் " என்ற இடத்தில் வைக்கப்பட்டது. (அதைத் தான் இன்றைக்கு விக்கிரக வழிபாட்டில் " கர்ப்பக்கிரகம் " என்று சொல்லு கிறார்கள். " மகாபரிசுத்த ஸ்தலத்தில் பிரதான அசாரியன் பாவ நிவாரண பலியின் ரத்தத்துடன் வருஷத்திற்கு ஒரு முறை மட்டுமே பிரவேசிக்க முடியும். அது **கர்த்தருக்கு மகாபரிசுத்தமானது** என்று தேவனே குறிப்பிட்டார். ( யாத் 30 : 10 ) யோர்தான் நதியை ஜனங்கள் கடந்த போது பெட்டியை சுமந்த லேவியர் நதியில் நின்றபோது ஜனங்கள் பெட்டிக்கு சுமார் **இரண்டா யிரம் முழத்தூரமான இடைவெளியில்** தான் நடக்க வேண்டும் என்று கட்டளை யிடப்பட்டது. இவையாவும் தேவனுடைய மேன்மையையும், மகிமை யையும், நாம் அவருக்குச் செலுத்த வேண்டிய கனத்தைப் பற்றிய அவசியத் தையும் நமக்கு உணர்த்துகிறது. இதையே புதிய உடன்படிக்கையில் எபிரெய ஆசிரியர், **நாம் பயத்தோடும் பக்தியோடும் தேவனுக்குப்**

**பிரிய மான ஆராதனைச் செய்யும்படி கிருபையைப் பற்றிக் கொள்வோம்.** (எபி 12 : 28) என்கிறார்.

**இரண்டாவதாக** தேவனுடையப் பெட்டி இஸ்ரயேல் ஜனங்களை வனாந்ததிரத்தில் **வழி நடத்தியது!** மேகம் பெட்டியின் மீது தங்கும் சமயம் ஜனங்கள் பாளயமிறங்கித் தங்கினார்கள். எழும்பிப் புறப்பட்ட போது அவர் களும் பிராயாணப் பட்டார்கள். இப்படித்தான் நாற்பது வருடக் காலமும் வழி நடத்தப்பட்டார்கள். இப்போது " பரிசுத்த வேதாகமே " நமக்கு வழிகாட்டியதாக உள்ளது. " கிறிஸ்துவின் சபையின் எழுதப்படாத ஒரு சட்டம் **வேதாகமம் எங்கே பேசுகிறதோ அங்கே நாங்கள் பேசுவோம்; வேதம் எங்கு அமைதி காக்கிறதோ அங்கு நாங்களும் அமைதியாய் இருப்போம்** என்பதாகும். அப்போஸ்தலனாகிய பவுல் கட்டுக்கதைகளுக்கு விலகி இம்மைக்கும் மறுமைக்கும் வாக்குத்தத்தமுள்ள தேவபக்தியே எல்லாவற்றிலும் பிரயோ ஜனமுள்ளது என்கிறார் ( 2 தீமோ 4 : 7, 8 ) அவருடைய வசனமே நம் கால்களுக்கு தீபமும் நம் பாதைக்கு வெளிச்சமுமாய் இருக்கிறது.

**மூன்றாவதாக** தேவனுடைய பெட்டியின் மேற்புறத்திலிருக்கும் கிருபா சனத்தின் வழியாக தேவன் அவர்களைச் சந்தித்தார். இது தேவாதி தேவன் தாம் உண்டாக்கிய மனிதர்களுடன் எப்போதும் தொடர்பு கொள்ளவே விரும் புகிறார் என்பதை நமக்குத் தெளிவுபடுத்துகிறது. இஸ்ரயேல் ஜனங்களுக்கு முக்கியமான நேரங்களில் ஆசாரியர்கள் தேவனிடம் விசாரிக்கும் இடமா கவும் கிருபாசனம் இருந்தது. இன்று நமக்கு – வானத்தின் கீழே மனுஷர் களுக்குள்ளே " இயேசுவின் நாமம் " இரட்சிக்கப்படுவதற்கு மட்டுமல்ல சபை மக்கள் தேவனிடம் எப்போதும் தைரியமாய் சேரக்கூடிய கிருபாசனமாகவும் உள்ளது. ( எபி 4 : 15, 16 ). நம் தேவைகளைச் சொல்லி பெற்றுக் கொள்ளவும், நம்முடைய குறைகளை அறிக்கையிட்டு சரி செய்து கொள்ளவும் தேவ சமூகத்தில் – எந்த இடத்திலும் எந்த நேரத்திலும் கிட்டிச் சேரவும், எல்லா புத் திக்கும் மேலான சமாதானத்தைப் பெறும் இப்பெரிய சிலாக்கியம் எத்தனை கோடி கொட்டிக் கொடுத்தாலும் ஒருவருக்குக் கிடைக்காத மிகப்பெரிய சிலாக்கியம் ஆகும். பிரதான ஆசாரியனே பலியிட்டு ரத்தத்துடன் பயந்து கொண்டு பிரவேசித்த அந்த தேவசமூகம் இன்று இயேசுவானவர் தமது மாம்சமாகிய திரையின் வழியாய் புதிய மார்க்கத்தின் மூலம் நமக்குக் கிடைக்கச் செய்திருக்கிறார். ஆகவே, சபை கூடிவருதலை விட்டு விடாதிருங்கள். தேவ சமூகத்தில் பிரவேசிக்கும் சிலாக்கியத்தை இழந்து போகாதிருங்கள்.

**நான்காவதாக** தேவனுடைய பெட்டி தேவனுடைய **வல்லமையை** விளங்கப் பண்ணுகிறது. ஜனங்களும் ஆசாரியன் ஏலியின் குமாரரும் தேவனுக்கு விரோதமாக நடந்து கொண்டபோது பெலிஸ்தரால் பெட்டி

பிடிபட்டு எருசலேமுக்கு வெளியே சென்றுவிட்டது. அதை அவர்கள் தாகோன் என்னும் அவர்களுடைய விக்கிரக கோவிலில் வைத்த போது அந்த சிலை நம் தேவனுடைய பெட்டிக்கு முன்பாகத் தலைகுப்புற விழுந்து துண்டு துண்டாக சிதறிப் போனது (2 சாமு 5 : 1 - 10) பின்பு பயந்து போன ஜனங்கள் ஒரு புது மாட்டு வண்டி செய்து பெட்டியை அனுப்பிவிட்டனர் இருந்தாலும் மூலவியாதியினால் தேவன் அவர்களைத் தண்டித்தார். வண்டியில் சென்ற பெட்டி ஓர் ஊரைச் சென்று அடைந்த போது அவ்வூர் மக்கள் இப்பெட்டியின் மகத்துவம் அறியாமல் அதனுள்ளே எட்டிப் பார்க்கத் துணிந்தார்கள். அதினாலே ஐம்பதினாயிரத்திற்கும் மேலான ஜனங்கள் மடிந்து போனார்கள் ( 1 சாமு 6 : 19 ) ஆக, தேவனுக்கு விரோதமான காரியங்கள் எப்போதும் தண்டனைக்குரியதாகவே உள்ளது. பெட்டியைத் தொட்டு உயிரை விட்ட ஊசாவின் மரணமும் ஓர் எச்சரிப்பாகவே உள்ளது. எனவேதான், கிறிஸ்துவின் உபதேசத்தில் அடிப்படை வார்த்தையாக “ மனந்திரும்புங்கள் ” என்ற கரிசனையான கட்டளையைக் காண்கிறோம். அதே நேரத்தில், மனந்திரும்பாமல் போனால் அப்படியேக் கெட்டுப் போவீர்கள் என்ற கண்டிப்பான எச்சரிப்பும் கொடுத்திருக்கிறார். ராஜ்ஜியமும், வல்லமையும், மகிமையும், என்றைக்கும் தேவனுக்கே உரியதாயிருப்பதால் நாம் ஜாக்கிரதையாய் வேதத்தைப் பின்பற்றுவோமாக.

**ஐந்தாவதாக** தேவனுடையப்பெட்டி நிம்மதியையும், மகிழ்ச்சியையும் கொண்டு வருகிறதாய் இருக்கிறது. எருசலேமை விட்டு பிரிந்து போன பெட்டி சுமார் **இருபது வருடங்கள்** சென்ற பிறகே தாவீது ராஜாவின் முயற்சியினால் எருசலேமுக்கு திரும்பக் கொண்டு வரப்பட்டது. அப்படி வந்தபோது நகரத்தில் மிகுந்த மகிழ்ச்சியும், கொண்டாட்டமும் ஏற்பட்டது. (உசாமு 6 : 3 - 17) அது மாத்திரமல்ல, அந்தப் பெட்டி இருந்த வீட்டாரையும் தேவன் ஆசீர்வதித்தார் என்று பார்க்கிறோம். எனக்கு அருமையானவர்களே! சங்கீதக்காரன் பாடியிருக்கிறபடி நம்மில் அநேகரும் வேதம் நம் மன மகிழ்ச்சியாய் இராதிருந்தால் நம் துக்கத்திலும் வருத்தங்களிலும் அழிந்து போயிருப்போம். (சங் 119 : 92 ) அவருடைய கிருபையுள்ள வார்த்தைகளுக்காக தேவனுக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக. பெட்டி நகரத்திற்கு திரும்பி வந்தபோது தேவன் மீது பற்றுதலாயிருந்த தாவீது ராஜா தன் அருமை மனைவி மீகாளின் கேலியையும் பொருட்படுத்தாமல் சமூகத்தில் ஒரு அடித்தட்டு குடிமகனைப் போல் குதித்து நடனமாடினான். (உசாமு 6 : 21) அது தேவனை அவன் முழு இருதயத்தோடும், பெலத்தோடும் அன்பு கூர்ந்ததற்கு ஓர் அடையாளமாயிற்று. தேவனுடைய பெட்டி கூடாரத்திலிருந்து ஆலயத்திற்கு மாற்ற தாவீது ஆசை பட்டபோது தேவன் அவனை விடவில்லை. காரணம், அநேக போர்கள் நடத்தி அவன் கையினால் மனித ரத்தத்தை சிந்தியுள்ளதால் தேவன் தாவீதி

னுடைய குமாரன் மூலமாக தேவாலயத்தைக் கட்டச் செய்தார். இருப்பினும் தாவீது ஆலயம் கட்டத் தேவையான பெருட்களையும் ஆயத்தம் செய்து விட்டுதான் மரித்தான். மேலும், ஒருமுறைத் தன் மகன் அப்சலோம் காலத்தில் தேவனுடைய பெட்டியைப் பிரிய நேரிட்ட போது துயரம் தாளாமல் சத்தமிட்டு அழுது கொண்டே வெறுங்காலோடு ஒலிவ மலை மீது நடந்து சென்றான். (2சாமு 15 : 29, 30) தேவன் மீதும், அவருடைய கற்பனைகள் மீதும் தாவீது வைத்த பாசம் நம்மை மெய்சிலிர்க்க வைக்கிறது. அதை அவனு டைய அநேக சங்கீதங்களில் கூட நாம் வாசித்து அறிகிறோம். எனவேதான் புதிய ஏற்பாட்டில் தேவன் தாவீதின் குமாரனாக யூதர்கள் மத்தியில் வெளிப்பட்டார். அவன் நடந்து சென்ற ஒலிவ மலையில் இருந்துதான் உயிர்த்தெழுந்த தேவகுமாரன் பரமேறிச் சென்றார் என்பது இன்னுமொரு விஷேசமாகும்.

தேவனுடைய உபதேசத்தை நமக்கு எடுத்து வந்த ஆண்டவரும், வானமும் பூமியும் ஒழிந்து போவதில்லை என்கிறார். அந்த வார்த்தைகளே நம் ஆவிக்குரிய தாகத்தைத் தீர்க்கும் விசேஷித்த ஜீவத் தண்ணீராக இருக்கிறது. அவருடைய வார்த்தைகளே ஒருக்காலும் பசியெடுக்காத திருப்தியான ஜீவ அப்பமாக இருக்கிறது. அவருடைய உபதேசம் அழிந்து போகாத மெய்யான போஜனமாயிருக்கிறது. இதையெல்லாம் ஆண்டவர் இயேசுவின் கிருபையால் பெற்றிருக்கிற நாமே மிகுந்த பாக்கியவான்களா யிருக்கிறோம். நாம் காணாமல் விசுவாசிக்கிற பாக்கியவான்கள். தரிசித்து நடவாமல் விசுவாசித்து நடக்கிற தேவப் பிள்ளைகள். இந்த மாபெரும் சிலாக்கியத்தை பெற்ற நாம் வளரும்படி அவருடைய வசனத்தின் மீது வாஞ்சையாயிருப்போம். (1 பேது 2 : 3) அசைவில்லாத ராஜ்ஜியத்தைப் பெறுகிறவர்களாகிய நாம் பயத்தோடும், பக்தியோடும் தேவனுக்குப் பிரியமாய் ஆராதனை செய்யும்படி கிருபையைப் பற்றிக் கொள்வோம். நம்முடைய தேவன் பட்சிக்கிற அக்கினியாய் இருக்கிறாரே (எபி 12 : 28, 29) கிறிஸ்துவின் கிருபையும் சமாதானமும் நம்மனைவரோடும் கூட இருப்பதாக. ஆமென். ●

## ஆவிக்குரிய வளர்ச்சிக்கான ஐந்து தேவைகள்

1. ஆவிக்குரிய ஆகாரம் – I பேதுரு 2 : 3; எபி. 5 : 12 – 14
2. பாவ நோயிலிருந்து விடுதலை – ரோமர் 8 : 23
3. சத்திய வசனத்தை நிதானமாய் பகுத்துப் போதித்தல் – II தீமோ. 2 : 15
4. தேவனுடைய வார்த்தைகளைப் பயிற்சி செய்தல் – I தீமோ. 4 : 7
5. ஆவிக்குரிய வளர்ச்சிக்கேற்ற சூழ்நிலை – II கொரி. 15 : 33

# இருதயத்தைக் கீழ்ப்படிதலின் ஆதாரமாக்குதல்

Bro. Michael L. King

இருதயத்தில் கீழ்ப்படிதல் விவேகமுள்ள இருதயத்தால் வெளிப்படுத்தப்படுகிறது. இப்பிரச்சனைக்குத் தீர்வுகாணும் முக்கியமான வசனப்பகுதிகளைக் கவனியுங்கள். " அவன் இருதயத்தின் நினைவு எப்படியோ, அப்படியே அவன் இருக்கிறான். " ( நீதிமொழிகள் 23 : 7 ); நீங்கள் உங்கள் இருதயங்களில் இப்படிச் சிந்திக்கிறதென்ன? (மாற்கு 2 : 8) ; மரியாளோ அந்தச் சங்கதிகளையெல்லாம் தன் இருதயங்களில் வைத்து, சிந்தனை பண்ணினாள் ( லூக்கா 2 : 19 ) நீதியுண்டாக இருதயத்திலே விசுவாசிக்கப்படும். இரட்சிப்புண்டாக வாயினாலே அறிக்கைப்பண்ணப்படும். (ரோமர் 10 : 10).

நாம் தேவனாகிய கர்த்தரிடத்தில் முழு இருதயத்தோடும், முழுமனதோடும் அன்புகூர வேண்டும் (மத்தேயு 22 : 37) இருதயத்திலிருந்து வரும் கீழ்ப்படிதல் தான் விசுவாசத்தின் கீழ்ப்படிதலாயிருக்கிறது. இருதயத்திலிருந்து வரும் கீழ்ப்படிதலுக்கு தீர்மானம் அவசியமாகிறது, அதுவும் குறிப்பாக, கீழ்ப்படிதலுள்ள விசுவாசத்தைப் பொறுத்தவரை மனதில் தீர்மானிப்பது மிகவும் அவசியமாகிறது. " அவனவன் விசனமாயுமல்ல, கட்டாயமாயுமல்ல தன் மனதில் நியமித்தபடியே கொடுக்கக் கடவன். உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார். (II கொரி. 9 : 7) நாம் தேவனுக்குக் கீழ்ப்படிகிற எல்லாவிஷயத்திலும் தீர்மானமும், உள்நோக்கமும் அவசியமாகிறது.

தேவனுடைய போதனைக்கு இரட்சிக்கும் விசுவாசம் ஓர் அன்புள்ள பதிலாயிருக்கிறது. ( ரோமர் 10 : 10 ) யாக்கோபு ஆசரியர் இவ்விதமாகச் சொல்லித் தன் வாசகர்களை உற்சாகப்படுத்துகிறார் " சோதனையை சகிக்கிற மனுஷன் பாக்கியவான் ; அவன் உத்தமனென்று விளங்கின பின்பு காத்தர் தம்மிடத்தில் அன்புகூருகிறவர்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணின ஜீவ கிரீடத்தை பெறுவான். " (யாக். 1 : 12) தேவனுக்கும் அவருடைய வார்த்தைகளுக்கும் கீழ்ப்படிவதின் முக்கியத்துவம் நிலங்களின் உவமையில் மிகத் தெளிவாக விளக்கப்பட்டுள்ளது. (மத். 13: 5) அதுபோல், விதைக்கிறவனுடைய உவமையிலும் விதை தேவனுடைய வார்த்தையாயிருக்கிறது, சில

விதைகள் நல்ல நிலத்தில் விழுந்தன. “ நல்ல நிலத்தில் விதைக்கப்பட்டவர்கள் வசனத்தைக் கேட்டு அதை உண்மையும் நன்மையுமான இருதயத்திலே காத்துப் பொறுமையுடனே பலன் கொடுக்கிறவர்களாயிருக்கிறார்கள் ” ( லூக். 8 : 15 ) பெந்தேகொஸ்தே நாளில் இரட்சிக்கப்பட்டு புதிய ஏற்பாட்டு சபையில் சேர்க்கப்பட்டவர்களெல்லாருமே வசனத்தைக் கேட்டு “ இருதயத்திலே குத்தப்பட்டு ” அதை “ சந்தோஷமாய் ஏற்றுக்கொண்டு ஞானஸ்நானம் பெற்றுதான் சபையில் சேர்க்கப்பட்டார்கள். இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் அனுதினமும் சபையிலே சேர்த்துக் கொண்டு வந்தார் ” (அப். 2 : 36 - 4, 1, 47)

ஒருவர் சுவிசேஷத்திற்கு அறிவுப்பூர்வமாகக் கீழ்ப்படிவதைவிட மனப்பூர்வமாகக் கீழ்ப்படிவதுதான் ஏற்றதாயிருக்கிறது. இருதயத்தினால் உண்டாகும் ஆவிக்குரிய தன்மை அவசியமானதுதான். ஆனால், இதயத்தின் உணர்வுகள் தேவனுடைய ஜனங்கள் இதற்கு முந்தைய நூற்றாண்டுகளில் வாழ்ந்த கிறிஸ்தவர்களைப் போல் பொதுவாக சில காரியங்களைச் செய்ய வேண்டும். விவாகம் செய்ய வேண்டும். இரட்சிக்கப்பட வேண்டும். ஏனென்றால், இப்படிப்பட்ட காரியங்களில் தேவனுடைய நிலை மாறாமல் அப்படியே தான் இருக்கிறது. தேவன் எப்போதுமே நம்மை மேல் நோக்கித்தான் பார்க்கிறார். இயேசு கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார். ( எபிரெயர் 11 : 8 ) தேவனும் மாறாதவராகவே இருக்கிறார். “ அவரிடத்தில் யாதொரு மாறுதலும் யாதொரு வேற்றுமையின் நிழலுமில்லை (யாக் 1 : 17). இது தேவனுடைய பராமரிப்பு பற்றியும், அவர் தம்முடைய வாக்குதத்தங்களை நிறைவேற்றுவதைப் பற்றியும் பேசுகிறது. ஆனால் அவருடைய வசனங்கள் மாறாமல் அப்படியே தான் இருக்கின்றன.

அடுத்த வசனப்பகுதியிலேயே அதாவது, (யாக்கோபு 1: 8 ல்) யாக்கோபு “அவர் சித்தங்கொண்டு தம்முடைய சிருஷ்டிகளில் நாம் முதற்பலன்களாவதற்கு நம்மைச் சத்திய வசனத்தினாலே ஜெநிப்பித்தார். ” என்று சொல்கிறார். இப்பகுதியில் நம் ஆவிக்குரிய திசைகாட்டும் கருவியின் காந்தமாக தேவனுடைய சித்தம் இருக்கும் உண்மையை நாம் கண்டறிய முடியும். இதே விதமான உண்மையை எழுதும்படி பவுல் ஏவப்பட்டார். “ முன்னே நீங்கள் பாவத்திற்கு அடிமைகளாயிருந்தும், இப்பொழுது உங்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட உபதேச சட்டத்திற்கு நீங்கள் மனப்பூர்வமாய்க் கீழ்ப்படிந்ததினாலே தேவனுக்கு ஸ்தோத்திரம், பாவத்தினின்று நீங்கள் விடுதலையாக்கப்பட்டு நீதிக்கு அடிமைகளானீர்கள். (ரோமர் 6 : 17,18).

கொரிந்து பட்டணத்து கிறிஸ்தவர்கள் கீழ்ப்படிதலின் அடிப்படை உபதேசத்தை உறுதியாய்ப் பிடித்துக்கொள்ள வேண்டியதாயிருந்தது. ரோமர் 6 : 17, 18 வசனங்களில் குறிப்பிட்டிக்கிறபடி, அவர்கள் அந்த உபதேச சட்டத்திற்கு கீழ்ப்படிந்ததால் இரட்சிப்பு அவர்களுக்கு சொந்தமானது என்று பவுலால் உறுதி செய்யப்பட்டது. மனந்திரும்புதலின் தன்மையும் முக்கியத்துவமும் ஞானஸ்நானத்தின் மூலமாக கிறிஸ்துவுக்குள் வருவது ஸ்திரப்படுத்தப்பட்ட உண்மையாயிருக்கிறது ( ரோமர் 6 : 15 ). மனந்திரும்பிய ஒருவர் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெறும் போது அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெறுகிறார். ( வசனங்கள் 3 – 5 ) மேலும், மனப்பூர்வமாக ஒருவர் கீழ்ப்படியும்போது பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டது போல, புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்து கொள்ளும்படிக்கு அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்திலே கிறிஸ்துவுடனே கூட அடக்கம் பண்ணப்படுகிறார் ( வசனம் 4 ) ஒருவர் மனப்பூர்வமாக உபதேச சட்டத்திற்குக் கீழ்ப்படியும்போது பாவத்திற்கு மரித்து நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்குள் தேவனுக்கென்று பிழைத்திருக்கிறார். எனவே, நாம், “ நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலே நமக்கு ஜெயங் கொடுக்கிற தேவனுக்கு ஸ்தோத்திரம் “ ( I கொரி 15 : 57 ). ●

---

## ஏன் கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவுக்காக ஆத்துமாக்களை ஆதாயம் செய்ய வேண்டும்?

- ஏனென்றால், ஆதிக்கிறிஸ்தவர்கள் ஆத்தும ஆதாயம் செய்கிறவர்களாயிருந்தார்கள் (அப்போஸ்தலர் 8)
- ஏனென்றால், எல்லோருமே தனிநபர் சுவிசேஷகர்களாயிருக்க வேண்டுமென்று கட்டளைப் பெற்றிருக்கிறார்கள் (மத்தேயு 28 : 19)
- ஏனென்றால், நாமெல்லோரும் சுவிசேஷத்திற்குக் கடனாளிகளாயிருக்கிறோம் (ரோமர் 1 : 14 – 17)
- ஏனென்றால், ஆத்தும ஆதாயம் நம்மை நாமே காத்துக்கொள்ள உதவுகிறது (மத்தேயு 25 : 14 – 26).

# சிலுவையை ஒன்றுமில்லாமல் செய்தல்

Bobby Dockery

மனித வரலாற்றின் மையச் சம்பவம் இயேசு கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டதுதான். சிலுவையில் தேவன் பாவத்தின் அடிமைத்தனத்திலிருந்த மனித இனத்தின் நம்பிக்கையற்ற நிலைமையை மாற்ற வரலாற்று செயல்பாட்டில் திருப்பத்தை ஏற்படுத்தினார். " அன்றியும் நாம் பெலனற்றவர்களாயிருக்கும்போதே குறித்த காலத்தில் கிறிஸ்து அக்கிரமக்காரருக்காக மரித்தார் " (ரோமர் 5 : 6).

சிலுவைதான் நமக்கு இரட்சிப்பை சாத்தியமாக்குகிறது (எபேசியர் 1 : 7) பாவத்தினால் பிறந்த நமக்கு அருமருந்தை அளித்து தேவனோடு நம்மை ஒப்புரவாக்கியது இச்சிலுவைதான். (எபேசியர் 2 : 16). மேலும், பாவத்தால் நிறைந்து சந்தேகத்தால் உருக்குலைந்து போயிருக்கிற உலகத்தில் உண்மையான ஆவிக்குரிய சமாதானத்தை சாத்தியமாக்குவதும் சிலுவைதான் (கொலோ 1 : 20).

அப்போஸ்தலனாகிய பவுல் சிலுவையின் முக்கியத்துவத்தை இந்த வார்த்தைகளில் சுருக்கமாகச் சொல்கிறார். **சிலுவையைப் பற்றிய உபதேசம் கெட்டுப் போகிறவர்களுக்குப் பைத்தியமாயிருக்கிறது. இரட்சிக்கப்படுகிற நமக்கோ அது தேவ பெலனாயிருக்கிறது. ஆனால், அதே நேரத்தில் சிலுவையின் வல்லமையை வியர்த்தமாக்க முடியும் என்றும் பவுல் சொல்கிறார்.** " ஞானஸ்நானத்தைக் கொடுக்கும்படி கிறிஸ்து என்னை அனுப்பவில்லை ; சுவிசேஷசத்தைப் பிரசங்கிக்கவே அனுப்பினார். கிறிஸ்துவின் சிலுவை வீணாய்ப்போகாதபடிக்கு சாதுரிய ஞானமில்லாமல் பிரசங்கிக் கவே அனுப்பினார். " ( I கொரி. 1 : 17 ) சிலுவையின் ஆச்சரியமான வல்லமை மனிதர்களுடைய உண்மையற்ற தண்மையினால் எப்படி அவமாக்கப் படுகிறது என்று பவுல் சொல்கிறார். இது எந்தெந்த வழிகளில் சாத்தியமாகிறது என்று கவனியுங்கள்.

**1. அதைக் கண்டு கொள்ளாமல் இருப்பதினால்**

சிலுவையை ஒரு போதும் சந்தித்திராதவர்களை சிலுவையால் இரட்சிக்க முடியாது. ரோமர் 10 : 14 ல் பவுல் " அவரை விசுவாசியாதவர்கள் எப்படி அவரைத் தொழுது கொள்ளுவார்கள்? அவரைக் குறித்துக் கேள்விப்படாதவர்கள் எப்படி விசுவாசிப்பார்கள்? பிரசங்கிக்கிறவன் இல்லாவிட்டால்

எப்படிக் கேள்விப்படுவார்கள்? என்று கேட்கிறார். சிலுவையைக் குறித்து நாம் மௌனமாயிருக்கும்போது, அதன் இரட்சிக்கும் வல்லமையை நாம் இல்லாமல் செய்கிறோம். சில சபைகள் சிலுவையைப் பற்றிய உபதேசத்தை இழந்துபோன உலகிற்கு அறிவிக்காமல் இருப்பதை தெரிந்து கொண்டிருப்பது நம் இரத்தத்தை உறையச் செய்கிறது. அவர்கள் சிலுவையின் வல்லமையைக் இல்லாமல்போகச் செய்கிறார்கள்.

**2. அதைத் திரித்துவிடுவதினால்**

சிலர் சிலுவையின் போதனைக்கு தவறான விளக்கம் கொடுப்பதினால் அவர்கள் தங்கள் உபதேச முறைமைக்கு தகுந்தாற்போல சிலுவையை வளைத்து உருமாற்ற முயற்சிக்கிறார்கள். உதாரணமாக, " வரையறுக்கப் பட்ட பாவநிவர்த்தி " என்னும் தவறான உபதேசம் பலரால் கடைபிடிக்கப்பட்டு வருகிறது. அந்த உபதேசம் இரட்சிக்கப்படுவதற்கு உலகத் தோற்றத்துக்கு முன்பே தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களுக்கு மட்டுமே சிலுவையின் வல்லமையை உணரமுடியும் என்று தவறாகப் போதிக்கிறது. ஆனால், வேதாகமம் எல்லா மனுஷருக்கும் இரட்சிப்பை அளிக்கத்தக்க தேவகிருபை யானது பிரசன்னமானது என்றும், ஒவ்வொருவருக்காக இயேசு கிறிஸ்து மரணத்தை ருசி பார்த்தார் என்றும் சொல்கிறது (தீத்து 2 : 11 ; எபிரெயர் 2 ; 9) திரிக்கப்பட்ட சிலுவையை அறிவிக்கும் தவறான சுவிசேஷம் இரட்சிக்காது. கிறிஸ்துவினிடத்திலும் அவருடைய உபதேசத்தினிடத்திலும் நம்பிக்கை வைக்காதவர்கள் சிவவையின் வல்லமையை இல்லாமல் போகச் செய்கிறார்கள்.

**3. அதை நிராகரிப்பதினால்**

இயேசு கிறிஸ்து ஒவ்வொருவருக்காக மரணத்தை ருசிபார்த்திருந்தாலும்கூட, கிறிஸ்துவின் சிலுவை மரணத்தின் பலனை எல்லோரும் பெற்றுக் கொள்ள மாட்டார்கள். சிலுவைக்குத் தங்களை கீழ்ப்படுத்தாததினால் பலர் நித்திய நித்தியமாக இழந்து போவார்கள். ரோமர் 6 : 3 ல் அப்போஸ்தலனாகிய பவுல் " கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா? " என்று கேட்கிறார். சிலுவையின் உபதேசத்தை நாம் மறுக்கும்போது, கிறிஸ்து நமக்காக மரிக்காமல் இருந்திருந்தால் நாம் எந்த இடத்தில் இருப்போமோ அந்த இடத்தில் நம்மை வைத்துக் கொள்கிறோம். சுவிசேஷத்தை நாம் நிராகரிக்கும்போது அது நம் ஜீவியங்களில் சிலுவையின் வல்லமையை இல்லாமல் போகச் செய்து விடுகிறது.

சிவவையின் வல்லமை மறுக்க முடியாதது, ஆனால் அதன் தாக்கத்தை இல்லாமல் போகச் செய்ய முடியும். சிலுவையால் நம் பாவங்களைப் போக்க செய்ய முடியும். அல்லது நம் பாவங்களால் சிலுவையை பயனற்றுப் போகச் செய்ய முடியும். இதில் உங்களுக்கானது எது?